தரம் 5 - 11 வரை
எண்: 06 எழுத்து: 03
மார்ச் 2012

AHARAM அகரம்

15 MAR 2012

World Today

Des: Sinan



அஷ்ஷெய்க் அப்துல் மஜீத் ஸிந்தானி

30/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Aharam

www.facebook.com/aharamJmf

facebook | Search | Azeem Zam | Home

Aharam

Local Business · Colombo, Sri Lanka · Edit Info

Wall

Hidden Posts

Info

Friend Activity

Insights

Photos

YouTube

Scribd

Welcome

Promotion Galler

Coupon

EDIT

About Edit

அகரம் - மாணவர்களுக்கான மாதாந்த சஞ்சிகை.

67
like this

12
talking about this

facebook இல் **Like** செய்யுங்கள்...

www.facebook.com/aharamJmf

Wall · Aharam · **Everyone (Most Recent)**

Share: **Status** Photo Link Video Question

Write something...

சர்வதேச வளிமண்டல தினம் - மார்ச் 23

வளிமண்டலமே நாம் புவியின் மீது உயிர் வாழ உதவுகிறது. மேலும் பூமியின் தட்ப வெப்பநிலையை சமநிலையில் பேணுவதில் முக்கிய பங்காற்றுகிறது. காலநிலை மாற்றத்தில் செல்வாக்கு செலுத்துகிறது. சீரற்ற காலநிலையால் அல்லது வளிமண்டலத்தில் ஏற்படக்கூடிய அசாதாரண மாற்றங்களினால் இயற்கை அனர்த்தங்களான புயல், வெள்ளம், சூறாவளி முதலானவை ஏற்படுகின்றன.

எம்மைக் காக்கும் வளிமண்டலத்தை மாசடையச் செய்து எம்மை நாமே அழித்துக் கொள்ளப் பார்க்கிறோம். அனைத்தையும் எரித்து வளிமண்டலத்தை மாசடையச் செய்கிறோம். எனவே, வளிமண்டலத்தைப் பாதுகாக்க எம்மாலான பங்களிப்பை நல்குவோம்; நலமாக வாழ்வோம்.

பெண்கள் தினம் மார்ச் - 08

இஸ்லாம் உலகிற்கு ஒளியூட்டி மனித உள்ளங்களையும் அவர்களது அறிவையும் பிரகாசிக்கச் செய்ய முன்னர் பெண்கள் அடிமைகளாக, ஆண்களின் போகப் பொருட்களாக, எவ்வித உரிமையும் அற்றவர்களாக, கண்ணியமிழந்தவர்களாக, பெண் குழந்தை பிறப்பதே கேவலம் என்று எண்ணி உயிரோடு புதைக்கப்படுபவளாக, கணவன் இறந்தால் அவனோடு சேர்த்து உடன்கட்டை ஏறுபவளாக என பலவகைகளிலும் கொடுமைப்படுத்தியது. இஸ்லாம் அவர்களைக் கண்ணியப்படுத்தியது. வாரிசுச் சொத்தில் உரிமை வழங்கியது. அன்னையாக அவளுக்கு அழகிய அந்தஸ்தை அளித்தது. கண்ணியமான உடையை அவளுக்கு அளித்தது. அவளைப் பராமரிக்க வேண்டிய பாரிய பொறுப்பை ஆண்களுக்கு வழங்கியது. அவள் உயர்ந்த இடத்தில் வைத்து போற்றப்பட்டாள். இவ்வாறு அவளுக்கு பல்வேறு உரிமைகளை வழங்கி இஸ்லாம் அவளைக் சங்கைப்படுத்தியது.

இதனால் இஸ்லாமிய வரலாறு கதீஜா, ஆஇஷா, சுமையா, ஹப்ஸா, பாத்திமா, அஸ்மா....(ரழியல்லா அன்ஹா) போன்ற கண்ணியமான தியாகம் நிறைந்த முன்மாதிரிப் பெண்களால் அலங்கரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்

எண்: 06 மார்ச் 2012 எழுத்து: 03

உள்ளே...

15

13

21

28

அஷ்ஷெய்க் அப்துல் மஜீத் ஸிந்தானி 32

09

38

பாடத்திட்டம்

விஞ்ஞானம்	34	கணிதம்	26
வரலாறு	18	தமிழ்	30

புலமைப் பரிசில் 39

பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
ஏ.ஏ.முஹம்மத் பவாஸ் (இஸ்லாஹி)

சந்தா விபரம்
1 வருட சந்தா 550 /-
6 மாத சந்தா 275 /-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: *aharamipc@gmail.com*
www.facebook.com/aharamJmf

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடல் கலாசாரத்தை உருவாக்குவோம்

"நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டுக் கற்றுக் கொள்ளுங்கள்."

இது எமதுள்ளத்தை ஊடறுத்துச் செல்லும் அல்குர்ஆனின் நிறைவான வழிகாட்டலாகும். உண்மையில் நாம் அறிந்தவையும் கற்றவையும் வெகு சொற்பமானவையே! நாம் அறியவும் கற்கவும் ஏராளமானவை எம்மைச் சூழ நிறைந்து கிடக்கின்றன. நமது கவனம், அக்கறை, ஈடுபாடு, வேட்கை, முயற்சி முதலானவை எம்மிடமிருந்து வெளிப்படும் அளவே நமது அறிவு பெறும் எல்லையின் அளவாகும்.

அன்பிற்கினிய வருங்காலத் தலைமைகளே! மாணவப் பருவம் பேரருளாகும். அறிவைத் தேடிப்பெறுவதற்கான சிரேஷ்டமான வாய்ப்பாகும். மாணவர் நீங்கள் அறிவிலும் திறனிலும் மனப்பாங்கிலும் மேம்பாடு காண வேண்டும். தமக்குத் தேவையான வழிகாட்டல்கள், பயிற்சி முறைகள் என்பவற்றை தமது ஆசிரியர்களைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ஆசிரியர்களை பாடப் புத்தகங்களைப் படித்துக் கொள்வதற்காக மட்டும் பயன்படுத்துவது என்பது எமக்கு கிடைத்த அரிய வாய்ப்பை இழப்பதற்கு சமமாகும்.

ஆசிரியர்கள் வித்தியாசமான திறன்கள், ஆற்றல்கள், அனுபவங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள். பாடங்களைப் படித்து புள்ளிகளைப் பெறுகின்றவர்கள் மட்டுமே திறமையானவர் கள் என்ற எமது பிழையான பதிவு பாடப் புத்தகங்களை மட்டுமே கற்பதற்கு ஆசிரியர்-மாணவர் உறவைப் பயன்படுத்துகின்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. எழுத்தாளர்களாக, இலக்கிய கர்த்தாக்களாக, கலைஞர்களாக, வசீகரப் பேச்சாளர்களாக வரவேண்டும் என்ற கனவு நமக்கு வேண்டும். கனவை நனவாக்க தொடர்ந்தேர்ச்சியான பயிற்சியும் முயற்சியும் வேண்டும்.

இங்குதான் நாம் ஆசிரியர்களது வழிகாட்டல்கள், ஆலோசனைகளைப் பெறுவதில் கூடிய கவனத்தை செலுத்த வேண்டும். எம்மை எதிர்கால உலகை எதிர்கொள்ளத் தக்கவர்களாக மாற்றி அமைத்துக் கொள்ள பயிற்சி பெற வேண்டும். ஆனால் இவ் ஆசிரிய வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதில் எவ்வளவு தூரம் எமது முயற்சிகள் அமைகின்றன என்பதை சிந்திக்க வேண்டும். ஆசிரியர்-மாணவர் என்ற உறவு பலமானது. மாணவர்கள் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டியவர்கள்; ஆசிரியர்கள் அதற்கு வழிகாட்டல் வழங்க கடமைப்பட்டவர் கள். இந்த உணர்வோடு ஆசிரியர்-மாணவர் உறவு அமைந்திருப்பதால் அறியாதவற்றை கூச்ச உணர்வின்றி கேட்டுக் கற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும்.

கற்றுத் தருவது ஆசிரியர்களின் பொறுப்பு என்பது போலவே அவர்களை நாடிச் சென்று கற்றுக் கொள்வது எமது பொறுப்பாகும். ஆனால் இன்று எண்ணற்ற ஆசிரிய வளங்கள் பயன்படுத்தப்படுகின்ற வீதம் மிகக் குறைவாகும். பாடசாலை நேரத்திலும் சரி ஏனைய நேரத்திலும் சரி தமது திறனை வளர்த்துக் கொள்வதற்காக ஆசிரியர்களை நாடி, அவர்களை அணுகிப் பயன்பெறும் நிலை இல்லையென்று சொல்லுமளவுக்கே நிலைமை காணப்படுகிறது. மேலதிக வகுப்புகளுக்கு செல்லும் கலாசாரம் குறைக்கப்பட்டு அதற்காக செலவிடும் நேரத்தை தமது ஆளுமை, திறன் என்பவற்றை விருத்தி செய்வதற்காக செலவிடுகின்ற கலாசாரத்தை மாணவ சமூகம் உருவாக்க வேண்டும்.

எமது தேடல் முயற்சியும் ஆர்வமும் வெளிப்படுகின்றபோது ஆசிரியர்கள் உத்வேகத்துடன் எமக்கு நிச்சயமாய் வழிகாட்டுவார்கள். நம்மையறியாமலேயே நாம் சிறந்த ஆளுமைகளாக வளர்ச்சி காண்போம். புத்தாக்க முயற்சிகளில் முனைப்புக் காட்டுவோம். அற்புதமான வியத்தகு சாதனையாளர்களாக நாம் மாறுவோம்.

இந்தக் கலாசாரம்தான் 'நான் கையாலாகாதவன்', 'படிப்பு ஏறாதவன்' என்ற மோசமான பதிவுகளை தகர்த்தெறியும்; எம் கண் முன்னே எதிர்காலத்தைப் பிரகாசிக்கச் செய்யும்; நமது வருகைக்காய் சமூகத்தை எதிர்பார்த்திருக்கச் செய்யும். வீடும் நாடும் பயன்பெறும் மனிதர்களாய் நாம் மாறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்குப் பின்னர் மனிதர்களுக்கு வழிகாட்ட அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இறைத்தூதர் நூஹ் (அலைஹிஸ் ஸலாம்) ஆவார்கள்.

நன்மையோ தீங்கோ செய்ய முடியாத வெறும் கற்சிலைகளை வணங்குவதிலேயே நூஹ் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்களது சமூகம் திளைத்திருந்தது. அவற்றிடமே நன்மைகளையும் தீங்குகளிலிருந்து பாதுகாப்பையும் வேண்டி அவர்கள் தஞ்சமடைந்தி ருந்தார்கள். வத், ஸுவாவு, யஊக், யகூஸ், நஸ்ர் இவைதான் அவர்களது தெய்வங்கள்.

அவர்கள் குருடர்களைப் போலவும் செவிடர் களைப் போலவும் நடந்து கொண்டனர். அதனால் அவர்களது கண்களுக்கும் செவிக்கும் அல்லாஹ் திரையிட்டு விட்டான். அவர்களது உள்ளங்களுக்கு முத்திரையிட்டு விட்டான். நிராகரித்தவர்கள் நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை கேலி செய்த னர். அவரது அழைப்பை கொச்சைப்படுத்தி இழிவு படுத்தினர்.

"நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்தான். அல்லாஹ் எங்களுக்கு ஒரு தூதரை அனுப்ப வேண்டுமென்றால்

கப்பல் கட்டிய இறைத் தூதர் - நூஹ் (அலைஹிஸ்ஸலாம்)

சூரியன் பிரகாசித்து பூமிக்கு ஒளிகொடுத்தபோதும் அவர்களது உள்ளங்கள் காரிருளால் சூழப்பட்டிருந் தன. படைப்பாளனை அறிந்து கொள்ளும் அறிவைப் பெற அவர்களது இதயங்கள் மறுத்தன. அதில் பிடி வாதமாகவே அவை இருந்தன. கற்பாறைகளை விட கடுமையானதாக இறுகி இருந்தன.

இந்த இதயங்களுக்கு ஒளியேற்றவும் படைப்பா ளன் அல்லாஹ்வை அறிமுகம் செய்யவும் நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அல்லாஹ் அனுப் பிவைத்தான். தடுமாற்றமின்றி போதிக்கும் ஞானமும் தெளிவாக எடுத்துரைக்கும் நாவன்மையும் மிக்கவராக நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் விளங்கி னார்கள். அவரது ஆளுமைக்கு பொறுமையும் மிருது வும் அணிசேர்த்தன.

அவர்களுக்கு நன்மைகளையே அவர் விரும்பி னார். சலிப்பும் விரக்தியுமடையாது இறைத் தூதை எத்திவைப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் பணியாற் றினார். இரவு பகலாக உழைத்தார். இரகசியமாகவும் பகிரங்கமாகவும் போதித்தார். அவரது அழைப்புக்கு வெகு சொற்பமானவர்களே பதில் அளித்தனர். அவரது தூதை சிறிய தொகையினரே உண்மைப் படுத்தினர். மறுத்தவர்கள் எண்ணிக்கையே அதிகம். அதிலும் சமூகத் தலைவர்கள் முன்னணி வகித்தனர்.

ஒரு வானவரைத் தூதராக அனுப்பட்டும். அவர் அழைத்தால் நாம் பதிலளிப்போம். உம்மை யார் விசுவாசித்துள்ளார்? எங்களில் தாழ்ந்தவர்கள்தான் உம்மை ஏற்றுள்ளார்கள். நாங்கள்தான் சிறந்த அறி வுடையவர்கள்; தேர்ச்சிமிக்க ஞானத்தைப் பெற்றவர் கள். நாம் பின்பற்றுவதை விட நீர் சொல்வது சிறந்த தாக இருந்தாலும் உம்மை ஒருபோதும் பின்பற்ற மாட்டோம்."

இப்படித்தான் நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை நிராகரிப்பாளர்கள் நிந்தித்தனர். அவரது உள்ளத்தைக் காயப்படுத்தினர்.

"நீரும் உம்மைச் சார்ந்தோரும் எம்மை விட சிறந்த வர்கள் அல்ல. அறிவால் கூடியவர்களும் அல்ல. நன் மைகளை செய்ய நினைப்பவர்களும் அல்ல. மீள எழுப்புதல் பற்றிய அறிவைப் பெற்றவர்களும் அல்ல. எனவே, உம்மை பொய்யராகவே கருதுகின்றோம்."

திரும்பத் திரும்ப தமது குல கோத்திரப் பெருமை யைப் பேசிப் பேசி அறிவீனர்களாக வாழவே அவர்கள் தீர்மானித்தனர். அவர்களை நோக்கி நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தன் வாதத்தை முன்வைத்தார்கள்.

(43ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசையிலிருந்து தவிர்ந்திருப்போம்

عَنْ أَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ:

لَيْسَ الغِنَى عَنْ كَثْرَةِ الْعَرَضِ وَلَكِنَّ الْغِنَى غِنَى النَّفْسِ (متفق عليه)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல் லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "செல்வம் என்பது அதிகமான பொருளாதாரம் இருப்பதல்ல. மாறாக உள்ளம் தேவையற்றிருப்பதே உண்மையான செல்வமாகும்." (அல்புகாரி, முஸ்லிம்)

அல்லாஹுத் தஆலா மனிதனுக்கு உவந்து அளித்திருக்கும் அருட்கொடைகள் எண்ணிலடங்காதவை. இவ்வாறு அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளுள் மிக முக்கியமானதுதான் உள்ளதைக் கொண்டு உள்ளத்தைத் திருப்தி அடையச் செய்யும் உயர் மனோநிலையாகும். இத்தகைய அருட்பேறு அனைவருக்கும் கிடைப்பதில்லை.

உலகில் காணப்படும் பல பிரச்சினைகளுக்கு அடிப்படையாகக் காணப்படுவது பேராசையாகும். தாம் மாத்திரம் கொள்ளை இலாபமீட்டி ஆடம்பரமாக வாழ வேண்டும் என்ற பேராசையானது மனித சமூகத்தை நாசப்படுத்தி எதிர்கால சந்ததியையும் அழிவுக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

'போதாது...' என்ற மனோநிலை ஏற்படுகின்றபோது இப்பேராசை உள்ளத்தில் வேரூன்றுகின்றது. இதன் விளைவாக உலக நலன்களை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு சிந்திக்கின்ற பண்பு ஏற்படுகிறது. பிறர் மீது பொறாமையும் குரோதமும் தோன்றி பிறரின் சொத்தின் மீதும் ஆசையேற்படுகிறது.

இந்தப் பேராசை எத்தகைய பாவமான செயலைச் செய்யவும் உள்ளத்திற்கு தூண்டுதலை ஏற்படுத்துகிறது. எனவேதான் நபியவர்கள் மேற்கூறப்பட்ட ஹதீஸில் சொத்துக்களை அளவுக்கு அதிகம் குவிப்பதைவிட இருப்பதைக் கொண்டு திருப்தியுறும் மனமே மிகப் பெரிய சீமான்தனம் எனக் கூறியுள்ளார்கள்.

மக்கள் தம்மிடம் உள்ளவற்றில் திருப்தியுறாது போகின்றமையால் உள்ளத்தில் நெருக்கடியும் உடல் சார்ந்த நோய்களும் ஏற்படும் வாய்ப்பும் அதிகரிக்கிறது. இதனாலேயே இன்று உலகில் அதிகமான மக்கள் உளவள ஆலோசனைகளை நாடிச் செல்வதையும் அவதானிக்கிறோம்.

அல்லாஹ் தான் வழங்கியிருக்கின்றவற்றை தனது அடியான் ஏற்றுக்கொள்கின்றானா என்பதைப் பரீட்சிப்பதற்காக மனிதர்களுக்கு மத்தியில் வெவ்வேறு அளவுகளில் சொத்துக்களையும் ஆற்றல்களையும் வழங்குகிறான். இதனைப் புரிந்து செயற்பட வேண்டியதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

மாணவர்களாகிய எமக்கு கிடைக்கப் பெற்றிருக்கின்ற ஆற்றலும் திறமையுமே மிகப் பெரிய செல்வங்களாகும். எனவே, எமக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற இத்தகைய செல்வங்களில் திருப்தி கொள்ள வேண்டும். எம்மைவிட பிற சகோதரனின் திறமையை பொறாமைக் கண் கொண்டு பார்த்து அவனுக்கு எதிராக செயற்படாது, அல்லாஹ் அவனுக்கு அருளியிருக்கும் அருளுக்காக மகிழ்ச்சியடைந்து நாமும் எம்மிடம் இருக்கும் திறமைகளைக் கண்டு அவற்றில் திருப்தியுற்று அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி அவற்றை வளர்த்துக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நபியவர்கள் கூறினார்கள்:

"உங்களை விட தாழ்ந்தவர்களைப் பாருங்கள். உங்களுக்கு மேலுள்ளவர்களை நீங்கள் பார்க்க வேண்டாம். அதுவே உங்களுக்கு அல்லாஹ் செய்திருக்கும் அருட்கொடைகளை குறைத்து நோக்காமல் இருக்க (உள்ளதைக் கொண்டு திருப்தியடைய) சிறந்த வழியாகும்."

(அல்புகாரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல உறவுகளைக் கட்டியெழுப்புதல்



ஸீரா

அழகிய முன்மாதிரி- 03

பிறருடன் நல்ல உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு பண்பாடான, சாதுர்யமான, பிறரை நோகடிக்காத, பிறர் ஏற்றுக் கொள்ளக்கூடிய, பிறரின் மனதை ஈர்க்கின்ற அணுகுமுறைகள் முக்கியம்.

வெற்றிகரமான செயற்பாட்டிற்கு பல்வேறு காரணிகள் பங்களிக்கின்றன. அதில் முக்கியமான ஒன்றுதான், அந்த செயற்பாட்டில் பங்கெடுக்கும் நபர்களுக்கிடையிலான உறவுகள். நண்பர்கள் இணைந்து செய்யும் வேலைகள் இலகுவில் வெற்றியடைவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனா வந்ததன் பின்னர் செய்த முக்கியமான பணிகளில் ஒன்றுதான், இஸ்லாமிய ஊழியர்களுக்கிடையே உளரீதியாக எவ்வாறான உடன்பாடு, உறவு இருக்க வேண்டும்என்பதற்கான சில வரையறைகளை வகுத்தமை ஆகும். அதனைத்தான் நாம் சகோதரத்துவ ஒப்பந்தம் என்கிறோம்.

நபியவர்கள் நண்பர்களோடு மட்டுமல்ல, தன்னோடு இணைந்து வாழ்கின்ற தங்களது எதிரிகளோடு கூட எவ்வாறான உடன்பாடுகள் காணப்பட வேண்டுமென்பதற்காக யூதர்களோடு உடன்படிக்கை செய்தார்கள். எனவே, நண்பர்கள், எதிரிகள் என்ற பாகுபாடின்றி ஒவ்வொருவரோடும் எவ்வாறான உறவுமுறைகள், உடன்பாடுகள் இருக்க வேண்டும் என்பதை நாம் வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

பண்பாக நடந்து கொள்ளுதல்

பிறர் உங்களுடன் பண்பாடற்ற முறையில் நடந்து கொள்ள முயலும்போதுகூட நீங்கள் அவர்களைத் திருத்தி பண்பான முறையில் நடந்து கொள்ளச் செய்யுங்கள்.

நபியவர்களைப் பார்த்து, "அஸ்ஸாமு அலைக்கும்" (உங்கள் மீது அழிவு உண்டாகட்டும்) என்று கூறி நபியவர்களின் இல்லம் நுழைந்தவர்களைப் பார்த்து, "வஅலைக்கும்..." (அதே அழிவு உங்கள் மீதும் உண்டாவ தாக...!) என சாதுர்யமாக பதிலளித்தமையும் அதன் போது ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் கோபப்பட்டு, "அஸ்ஸாமு அலைக்கும் வலஃனா...!" (உங்கள் மீது அழிவும் நாசமும் உண்டாகட்டும்!) என கூறி, "அல்லாஹ்வின் தூதரே! அவர்கள் உங்களைப் பார்த்து என்ன கூறினார்கள் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா?" என வினவினார்கள். அதற்கு நபியவர்கள் "அதற்கு நான் பதில் அளித்து விட்டேனே" என்று அமைதியாகக் கூறினார்கள்.

மற்றொரு முறை ஒரு மனிதர் வரும் போது, "மோசமான மனிதர் ஒருவர் வருகிறார்" எனக் கூறினார்கள். அவர் வந்ததும் அவருடன் அன்பாகப் பேசி அவரை சந்தோஷமாக அனுப்பி வைத்தார்கள். ஆச்சரியமடைந்த ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள், அதுபற்றி நபியிடம் வினவியபோது, "நான் மோசமானவன் இல்லையே!" என தனது பண்பாட்டை செயற்பாட்டிலும் வார்த்தையிலும் வெளிப்படுத்தினார்கள்.

பிறருடன் நல்ல உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு பண்பாடான, சாதுர்யமான, பிறரை நோகடிக்காத, பிறர் ஏற்றுக் கொள்ளக்கூடிய, பிறரின் மனதை ஈர்க்கின்ற அணுகுமுறைகள் முக்கியம். மனிதர்களுக்கு இடையிலான தொடர்புகள், உறவுகள் முக்கியமானவை. இவற்றை நீங்கள் கட்டி எழுப்புங்கள். வாழ்வில் வெல்வீர்கள். உறவுகள் உங்களுக்கு உதவும். உறுதுணையாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் சிலந்தி ஒக்டோபஸ்



ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk

நாம் வாழும் நிலப் பகுதியில் உள்ளது போன்றே கடலிலும் மிகவும் விசித்திரமான, அற்புதமான படைப்பினங்களை அல்லாஹ் படைத்துள்ளான். கடல் வாழ் உயிரினங்களில் விசித்திரமான ஒன்றுதான் ஒக்டோபஸ் (Octopus) தோற்றத்தில் சிலந்தியை ஓரளவு ஒத்திருப்பதாலும் எட்டுக் கைகளைக் கொண்டிருப்பதாலும் இது 'கடல் சிலந்தி' என்றும் 'சிலந்தி மீன்' என்றும் அழைக் கப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு Deep rise என்ற ஆங்கிலத் திரைப்படம் வெளிவந்தது. நூற்றுக்கணக்கான பிரயாணிகளுடன் சென்று கொண்டிருக்கும் ஒரு பெரிய கப்பல் நடுக் கடலில் இயந்திரக் கோளாறு காரணமாக அப்படியே நின்று விடுகிறது. மக்கள் அச்சத்தில் உறைந்து போயிருக்கும் இரவு நேரத்தில் கடலிலிருந்து கப்பலுக்குள் நுழையும் பிரமாண்டமானதொரு ஒக்டோபஸ் கப்பலில் இருக்கும் அனைவரையும் அதன் நீண்ட கொடூரமான கைகளால் பிடித்து விழுங்கி விடுகிறது. அன்று இத்திரைப்படம் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவர் மத்தியிலும் பரபரப்பை ஏற்படுத்தி ஒக்டோபஸ் பற்றிய ஒரு தவறான கருத்தையும் பதித்துவிட்டது.

நாம்கூட இவ் உயிரினத்தை கொடூரமானதாகவும் உடலில் ஒட்டி இரத்தத்தை உறிஞ்சக் கூடிய பயங்கரமான உயிரினமாகவும்தான் பார்க்கிறோம். ஒருவேளை அதன் தோற்றமும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். பெரிய தலைப்பகுதியையும் துதிக்கை போன்று நீளமான எட்டுக் கைகளையும் வழுவழுப்பான உடலையும் முகத்தின் இரு மருங்கிலும் சிறிய இரு கண்களையும் கொண்டிருக்கும் ஒக்டோபஸ்கள் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தாலும் சாதுவான குணவியல்பை உடையவையே!

எலும்புகள் ஏதுமற்ற தசையாலான உயிரினம் என்பதால் நத்தை, அட்டைகளின் குடும்பமான Mollusca (மெல்லுடலிகள்) குடும்பத்திலும் 08 கைகள் இருப்பதால் Octopoda (எண் காலிகள்) வகுப்பிலும் சேர்க்கப்படுகின்றன. இதுவரைக்கும் 350ற்கும் மேற்பட்ட ஒக்டோபஸ் இனங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

ஒக்டோபஸ்களின் எட்டுக் கைகளும் அவற்றின் உயிர் வாழ்க்கைக்கு அல்லாஹ் கொடுத்த மிக முக்கிய உறுப்பாகும். கடலடி நிலத்தில் ஊர்ந்து செல்வதற்கும் கற்களையும் தாவரங்களையும் பற்றி நகர்வதற்கும் கைகள் அனைத்தையும் ஒரே தடவையில் உந்தி, சுருக்கி, விரித்து நீந்துவதற்கும் இந்தக் கைகள் உதவுகின்றன. இவற்றின் கைகளில் உறிஞ்சிகள் இருப்பதால் வழுவழுப்பான பாறைகளிலும் கண்ணாடிச் சுவர்களிலும் இவற்றால் இலகுவாகப் பயணிக்க முடியும். அதேபோன்று கடலடி அலைகளில் சிக்கினாலும் ஏதாவதொரு பொருளைக் கடினமாகப் பற்றிக் கொள்வதன் மூலம் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முடிகிறது. அல்லாஹ் இவற்றின் கைகளை உறுதியான தசை நார்களைக் கொண்டு அமைத்துள்ளான்.

அவற்றின் கைகளின் நுனிப் பகுதி சிறிதாக 2½ அங்குலத்தில் விரல் போன்று இருப்பதால் சிறு பொந்துகளுக்கு உள்ளும் அதனை நுழைத்து இரைகளைத் தேடிக்கொள்கின்றன. வளர்ந்த ஒக்டோபஸ் ஒன்றின் ஒரு கையில் மட்டும் இரண்டு வரிசைகளில் 250 உறிஞ்சிகள் காணப்படுகின்றன. இரையை கைகளால் சுருட்டி இவ் உறிஞ்சிகளால் அதன் இரத்தத்தை உறிஞ்சவும் இவற்றால் முடியும். கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிமிட்டும் நேரத்திற்குள் தமது இரையைப் பற்றிக் கொள்ள இந்தக் கைகள் பெரிதும் உதவுகின்றன.

பொதுவாக ஒக்டோபஸ்கள் கடல் வாழ் பாசித் தாவரங்களையும் பிற மீன்களையும் நண்டு, இறால் போன்றவற்றையும் உண்டு வாழ்கின்றன. சில வகையான ஒக்டோபஸ்கள் தமது இனத்தையே உண்ணவும் செய்கின்றன. இரவு நேரங்களில் இரை தேட வெளிக் கிளம்பும் ஒக்டோபஸ் இரை கையில் சிக்கியதும் தனது உமிழ்நீர்ச் சுரப்பியிலிருந்து ஒரு வகையான விஷத்தைச் செலுத்தி அதனை உயிரி ழக்கவோ அல்லது உணர்விழக்கவோ செய்கிறது. இதனால் இரை தப்பிச் செல்ல முடியாது. பின்பு அந்த இரையைச் சேமித்து வைத்து உணவாக்கிக் கொள்கிறது.

250 kg நிறையுள்ள ஒரு ஒக்டோபஸினால் 2 அங்குலம் அளவுடைய ஒரு துவாரத்தினூடாகச் செல்ல முடியும். இது எதிரிகளிடமிருந்து தப்புவதற்கு அல்லாஹ் இவற்றுக்கு ஏற்படுத்திக் கொடுத்த மகத் தானதோர் ஏற்பாடாகும்.

எதிரிகளிடமிருந்து தப்புவதற்கு இவற்றுக்கு அல்லாஹ் மற்றொரு விஷேட அமைப்பைக் கொடுத்துள்ளான். உயிரினங்களிலேயே மிகத் துரித கதியில் நிறம் மாறும் ஆற்றலை ஒக்டோ பஸ்கள் பெற்றுள்ளன. அச்சம் ஏற்படும்போது வெண் ணிறமாகவும் கோபமேற்படும்போது செந்நிறமா கவும் அதன் நிறம் மாறிவிடும். அத்தோடு தானி ருக்கும் சூழலின் நிறத்திற்கேற்ப தன் நிறத்தையும் பச்சை, பழுப்பு, செம்பழுப்பு மற்றும் உடலில் புள் ளிகளாக மாற்றி சூழலோடு இயைந்துவிடும். மேலும் எதிரி விலங்குகள் மோப்பம் பிடித்து தன்னை இனங்கண்டு கொள்ளாதிருக்க ஒருவகை மையை வீசி எதிரி விலங்கின் மோப்ப சக்தியையும் மழுங் கடித்துவிடும் வல்லமை அல்லாஹ் இவற்றுக்கு அருளியதே.

எதிரி விலங்குகளோடு இவ்வாறு நடந்து கொண் டாலும் மனிதர்களோடு சாதுவாகப் பழகுவதாகவும் சிலபோது தொந்தரவுகள் ஏற்படுகையில் பக்கத்தி லிருக்கும் பொருளை இறுகப் பற்றுவதாகவும் அத னையே மனிதர்கள் தம்மைத் தாக்குவதாகக் கருதுகின்றார்கள் என அமெரிக்காவின் பிரபல கடல் சுழியோடியான லொ ஹிவிட் கூறுகிறார். ஒக் டோபஸை அன்போடு தடவிக் கொடுக்கும்போது அது விலகிச் செல்வதாகவும் குறும்புத்தனம் புரிவ தாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இவ்விலங்குக்கு அல்லாஹ் மூன்று இதயங்களை வழங்கியுள்ளான். மூன்று இதயமும் ஒக்டோபஸ் சுவாசிப்பதற்கு உதவுகின்றன. இவற்றின் இரத்தம்கூட நீல நிறத்தில்தான் இருக்கும். இதற்குக் காரணம் அவற்றின் இரத்தத்தில் செப்பு கலந்த ஹீமோசயனின் (Hemocyanin) எனும் புரதப் பொருள் காணப்படு கின்றமை ஆகும். எனவே ஒட்சிசனை சுவாசித்ததும் இரத்தம் நீல நிறமாக மாறுகிறது.

மூன்று இதயங்களில் இரண்டு இதயங்கள் ஒக்டோபஸின் மூச்சு விடும் செதில் பகுதிக்கு நீல நிற இரத்தத்தை அதாவது, ஒட்சிசன் ஏற்றப்பட்ட இரத்தத்தைப் பாய்ச்சுகின்றன. மூன்றாவது இதயம் உடலுக்குத் தேவையான இரத்தத்தைச் செலுத்தும் தொழிலைச் செய்கிறது. சுமாராக ஒரு மைல் ஆழத்தில் வாழும் இந்த ஒக்டோபஸ்கள் சூரிய வெப்பத்தையும் தூய காற்றையும் சுவாசிக்க ஆழமற்ற கடற்பரப் புக்கும் கடலில் மேல் தளத்திற்கும் வந்துவிட்டுச் செல்கின்றன.

எதிரி விலங்குகளோடு இவ்வாறு நடந்து கொண்டாலும் மனிதர்களோடு சாதுவாகப் பழகுவதாகவும் சிலபோது தொந்தரவுகள் ஏற்படுகையில் பக்கத்தில் இருக்கும் பொருளை இறுகப் பற்றுவதாகவும் அதனையே மனிதர்கள் தம்மைத் தாக்குவதாகக் கருதுகின்றார்கள் என அமெரிக்காவின் பிரபல கடல் சுழியோடியான லொஹிவிட் கூறுகிறார்.

ஒக்டோபஸ்கள் அதிகமாக வெப்பக் கடற் கரைப் பிரதே சங்களில் வாழ்வ தால் அவற்றின் இரத் தத்திலுள்ள சிவப்பு அணுக்களில் காணப்படும் ஈமோகுளோபின் எனும் இரும்புச் சத்துள்ள இரத்தம் ஒட்சிசனை உட லெங்கும் எடுத்துச் செல்லும். வாழும் நீர் குளிர்ச்சியடைந் தாலோ அல்லது அவை குளிர்ச்சி யான நீர்ப் பிரதே சத்துகோ ஒட்சி சனின் அடர்த்தி குறைவான நீர் நிலைக்குச் சென் றாலோ ஹீமோசயனின் என்ற செப்பு கலந்த இரத்தம் ஒட் சிசனை உடலெங்கும் எடுத்துச் செல்லும். இடத்திற்கு ஏற்றவாறு இரத்தப் பரிமாற் றம் நடைபெறும் அற்புதம் எவ்வாறு நடைபெறு கிறது என்பது அறிவியலுக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே கருத வேண்டும். அது இறை வல்லமை யின் எடுத்துக்காட்டு ஆகும்.

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் உயிரினங்கள் 5cm முதல் 6 m வரை வளரக்கூடியன. ஆனாலும் வட பசுபிக் கடலில் வாழும் ஒக்டோபஸ்கள் இதனை விடவும் அளவில் பெரிதாக வளர்கின்றன. ஒக்டோபஸ்களின் ஆயுட் காலமும் குறுகியதாகவே உள்ளது. ஒரு ஒக்டோபஸ் சுயாதீனமாக 4 முதல் 5 வருடங்கள் வரை உயிர் வாழக்கூடியது. இவ்வளவு குறுகிய காலத்திலும் அதிகளவில் உணவு உட்கொள்வதால் துரித வளர்ச் சியடைகின்றன. 35kg நிறையுடைய ஒரு ஒக்டோபஸ் ஆறு மாதங்களில் 80kg நிறையாக வளர்ச்சியடையும்.

தனித்தனியாக வாழும் ஆண், பெண் ஒக்டோ பஸ்கள் இனப்பெருக்கத்திற்காக ஒன்றிணையும். இதன் பின் சில மாதங்களில் ஆண் ஒக்டோபஸ் இறந்துவிடும். பெண் ஒக்டோபஸ் ஒரு தடவையில் இரண்டு இலட்சம் முட்டைகளை இடும். பின்னர் மிகவும் சிறிய அளவிலிருக்கும் முட்டைகளை தாய் ஒக்டோபஸ் மாலை போன்று கோர்த்து கற்பாறை களில் பாதுகாப்பாகத் தொங்கவிடும். ஒரு மாலையில் 1000 முட்டைகள் வரை இருக்கும். முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிப்படும் வரை தாய் ஒக்டோபஸ் அவ்விடத்தைவிட்டு நகராது, உணவு உட்கொள்ளாது முட்டைகளைப் பாது காக்கும். முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்த தும் தாய் அவற்றை விட்டுவிட்டுச் சென்றுவிடும். பின்பு சில வாரங்களில் தாயும் இறந்துவிடும். மீண்டும் குஞ்சு ஒக்டோபஸ்களின் வாழ்க்கை வட்டம் ஆரம்பமாகும்.

ஒவ்வொரு உயிரினதும் வாழ்க்கை வட்டம் மிகவும் அற்புதம் வாய்ந்ததாய் அல்லாஹ் ஏற்படுத் தியுள்ள தவணை வரை இவ்வாறு சுழன்று கொண்டே இருக்கிறது. அவற்றிலிருந்து மனிதன் பல அத்தாட் சிகளைக் கண்டுகொள்வதற்கே இந்த நிர்ணயிக் கப்பட்ட சுற்றுப் பயணம்.

"அனைத்தும் குறிப்பிட்டதொரு காலம் வரை ஓடிக்கொண்டிருக்கின்றன." (35: 13)

பெண்கள் சமுதாயத்தின் கண்கள்

பெண்கள் சமுதாயத்தின் கண்கள் என்று கருதப்படுகின்றனர். மனிதனது வாழ்க்கைக்கு கண்கள் எவ்வளவு முக்கியமோ அதே போல் ஒரு சமுதாயம் சிறப்புற்று விளங்க பங்களிப்பவர்கள் பெண்களே!

பிள்ளைகளுக்கு வழிகாட்டி சிறந்த எதிர்கால சமுதாயம் உருவாக உழைப்பவர்கள் பெண்கள். ஒரு குழந்தைக்கு தாயின் வழிகாட்டல் அவசியமானது. தாயின் அரவணைப்பில் வளராத குழந்தை சீரழிந்து விடுவது போல் பெண்கள் இல்லாத சமுதாயம் குட்டிச் சுவராகிவிடும். பெண்களின் சரியான வழிகாட்டல் மூலமே சிறந்த சமூகம் உருவாக முடியும். ஒரு சமுதாயத்தின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கி பிரகாசிக்கச் செய்யும் பெரும் பணி காரணமாகவே பெண்கள் சமுதாயத்தின் கண்கள் எனப்படுகின்றனர்.

இத்தகைய பெண்களின் மகிமையை உணராமல் பெண்களை வீட்டிற்குள் முடக்கிவிடுபவர்களும் உண்டு. தங்களது உழைப்பினாலேயே வீட்டு வேலைகள் அனைத்தும் நடப்பதாக நினைக்கும் ஆண்களும் உண்டு. உண்மையில் பார்த்தால் வீட்டுப் பணிகளில் பெரும்பாலானவை பெண்களாலேயே நடக்கின்றன.

ஆண்கள், பெண்கள் தொடர்பான வாழ்க்கைக்கு உகந்த வழிமுறைகளை அல்குர்ஆன் அழகாகச் சொல்லித் தந்துள்ளது. தாய்மை, பெண்மை ஆகிய பண்புகளைப் பற்றி பெருமையாகப் பேசுகின்றது. சமுதாயத்தின் கண்களாக, மங்காத மாணிக்கங்களாக பாதுகாத்துப் பேணப்பட வேண்டியவர்கள் என போற்றுகின்றது.

இத்தகைய அதி உயர்ந்த உன்னத அந்தஸ்தை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளது. அல்குர்ஆனில் சூரத்துன் நிஸா என்று பெண்கள் பற்றிய ஓர் அத்தியாயத்தையே இறக்கி அல்லாஹ் சிறப்பித்துள்ளான்.

ஏ.டபிள்யு. முஹம்மட், சிராஜ் அரபுக் கல்லூரி ஓட்டமாவடி

அகரம் சஞ்சிகையை உங்கள் சக நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியுமா?

- கண் தெரியாதோர் பயன்படுத்தும் எழுத்து? **பிறெயில் எழுத்து**
- பூனை விரும்பி உண்ணும் தாவரம்? **குப்பைமேனி**
- யானைகளை அடக்கப் பயன்படுத்தும் தடியின் பெயர்? **அங்குசம்**
- இலங்கையில் கரப்பந்தாட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு? **1916**
- நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு? **நோர்வே**
- நீர் யானைகளுக்கு சிவப்பு நிறமான வியர்வை சுரக்கின்றது.

எச்.எம். பாத்திமா, தம்பாலை, அல்ஹிலால்புர



இலங்கையின் தகவல் தொடர்பு சாதனங்கள்

இலங்கையின் முதலாவது தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை	– ITN
ITN ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு	– 1979 ஏப்ரல் 14
இலங்கையில் வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு	– 1925
இலங்கையில் முதலாவது தமிழ்ப் பத்திரிகை, வெளியான ஆண்டு	– உதயதாரகை, 1841ம் ஆண்டு
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு	– 1982 பெப்ரவரி 15
வீரகேசரி பத்திரிகை வெளிவந்த ஆண்டு	– 1932
டெய்லி நியூஸ் பத்திரிகை வெளிவந்த ஆண்டு	– 1918
ஒப்ஸவர் பத்திரிகை வெளிவந்த ஆண்டு	– 1923
டெலக்ஸ் வசதி அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு	– 1963
சிங்கள மொழியில் வெளிவந்த முதலாவது இஸ்லாமிய சஞ்சிகை	– பிரபோதய (1985)

எம்.ஏ.எப். அஸ்கா
தரம்- 8, வெலம்பொட மு.ம.வி.

அறிந்து கொள்ளுங்கள்

பாரத தேசம் என அழைக்கப்படும் நாடு	– இந்தியா
பாலைவனம் இல்லாத கண்டம்	– ஐரோப்பா
அதிக நிலப்பரப்பைக் கொண்ட நாடு	– ரஷ்யா
துருக்கி நாட்டின் பண அலகு	– லீரா
ஆபிரிக்கக் கண்டத்தில் மிகப் பெரிய நாடு	– சூடான்
ஆபிரிக்காவின் உயர்ந்த மலை	– கிளிமஞ்சரோ
தொலைநகலை கண்டுபிடித்தவர்	– கியுவானிகேடில்
அன்னை தெரேசா பிறந்த இடம்	– ஸ்கோபோ
பாகிஸ்தான் நாட்டின் நாணயம்	– ரூபாய்
கிண்ணியாப் பாலத்தின் நீளம்	– 398 மீற்றர்
இந்தியாவின் நுழைவாயில் என்றழைக்கப்படும் நகரம்	– மும்பை
ஒரேயொரு நிறத்தையுடைய தேசியக் கொடியைக் கொண்ட நாடு	– லிபியா
பிறக்கும்போது மனிதனின் முள்ளந் தண்டிலுள்ள எலும்புகளின் எண்ணிக்கை	– 33

மு.கி. தாஜ் அப்ஷான் நிஸா, தரம் 11
தி/ குறிஞ்சாக்கேணி ம.ம.வி, குறிஞ்சாக்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கு சிறந்தவை சில...

- தெற்காசிய வலய நாடுகளின் எண்ணிக்கை – 8
- அண்மையில் இவ்வமைப்பில் புதிதாக சேர்ந்து கொண்ட நாடு – ஆப்கானிஸ்தான்
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் – பான்கீ மூன்
- தற்போதைய கல்வி அமைச்சர் – பந்துல குணவர்த்தன
- அவுஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு – கிரிக்கெட்
- இந்தியாவின் தேசியப் பறவை – மயில்
- நியூசிலாந்தின் தேசியப் பறவை – கிவி
- அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகம் – கங்காரு
- சீமெந்தின் மூலப்பொருள் – சுண்ணாக்கல்
- பழங்காலத்தில் கணிதப் பிரச்சினைகளைத் தீர்க்க பயன்படுத்திய கருவி – அபாகஸ்

எம். ஜே. எப். முபஷ்ஷிரா,
தரம் 8, பு/ பாத்திமா பாலிகா ம.வி.

உங்களுக்குத் தெரியுமா?

- ஒரு தேக்கரண்டி எடுக்கும் நீரின் அளவு – 5 மில்லி லீற்றர்
- எவெரெட்ஸ்ட் சிகரம் அமைந்துள்ள இடம் – நேபாளம்
- உலகிலேயே அரச விடுமுறைகள் அதிகம் உள்ள நாடு – இலங்கை
- உலகப் புகழ்பெற்ற சாய்ந்த கோபுரம் உள்ள நாடு – இத்தாலி

எப். ஹனா அரபா, பொ/ முஸ்லிம் மத்திய கல்லூரி, பொலன்னறுவ

கிரிக்கெட் தகவல்கள்

கிரிக்கெட்டின் தந்தை என வர்ணிக்கப்படுபவர்	டொனால்ட் ப்ரெட்மென்
ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை	11
அதிக தடவை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய நாடு	அவுஸ்திரேலியா (5 தடவை)
'லிட்டில் மாஸ்டர்' என வர்ணிக்கப்படும் கிரிட்கெட் வீரர்	சுனில் கவாஸ்கர்
ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஆகக் கூடிய ஓட்டம் பெற்ற வீரர்	வீரேந்திர ஷெவாக் (219 ஓட்டம்)
டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டம் பெற்ற வீரர்	பிரெயன் லாரா (400 ஆட்டமிழக்காமல்)
இலங்கை உலகக் கிண்ணத்தை வென்ற ஆண்டு	1996
அதிகூடிய மொத்த ஓட்டம் பெற்ற வீரர்	சச்சின் டெண்டுல்கர்



எம். எஸ். ஹுஸ்னி, தரம்-08
அக/ அட்டாளைச்சேனை ம.ம.க, அட்டாளைச்சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளிச் செய்திகள்

விண்வெளிக்கு முதல் செய்மதியை அனுப்பிய நாடு	சோவியத் ரஷ்யா
விண்வெளிக்கு முதல் சென்ற பிராணி	லைக்கா எனும் நாய்
விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதன்	யுரி ககாரின்
விண்வெளிக்குச் சென்ற முதல் பெண்மணி	வெலண்டினா டெரெஸ்கோவா
விண்வெளியில் மிதந்த முதல் மனிதன்	அலக்ஸி ஸியனோவ்
முதல் விண்வெளி நிலையம்	சல்யுட்
செவ்வாய் கோளில் தரையிறங்கிய முதல் வாகனம்	வைகிங்
விண்வெளியில் அதிக நேரம் நடந்த முதல் பெண்மணி	சுனீதா வில்லியம்ஸ்
விண்வெளிக்கு பரீட்சார்த்தமாகச் சென்று முதன் முதலில் உயிருடன் மீண்ட பிராணி	ஈனோஸ் எனும் குரங்கு

எம்.எச். பாத்திமா, அல்ஹிலால்புரம், தம்பாளை

சிந்தனைக்கு சில துளிகள்

1. புற அழகு கொண்டவர்கள் எல்லாம் அக அழகு கொண்டவர்களல்லர்; புற அழகற்றவர்கள் எல்லாம் அக அழகற்றவர்களும் அல்ல.
2. அருமையான கூட்டைக் கலைத்து தேன் எடுத்தவனும் தன் கஷ்டத்தையே பெரிதெனக் கூறுகிறான்.
3. ஒவ்வொருவருக்குள்ளும் பல திறமைகள் ஒளிந்திருக்கும். அதை உணரும் வரை உயர்வு வராது.
4. தகுதி உள்ளவரை தலைவராக்கிக் கொள்வதே தலைசிறந்த கூட்டத்தின் வெற்றியாகும்.
5. வரட்டு கௌரவமும் முரட்டுப் பிடியும் மனிதனை தோல்வியில் தள்ளிவிடும்.
6. சீறிப் பாயும் சிங்கம் கூட சிறைப்பட்டால் சீற்றத்தை அடக்கிக் கொள்ள நேரிடும்.

ஏ.எப். ரினோசா

மட்/ பிறைந்துரைச்சேனை, அஸ்ஹர் வித்தியாலயம்

வேற்று நாட்டுப் பழமொழிகள்

- நல்லவர்களோடு சேர்ந்தால் நாய்க்கும் பகுத்தறிவு வரும் – சீனா
- தூங்குகின்றவனை எழுப்புவதற்காக பொழுது இருமுறை விடிவதில்லை – சீனா
- அறிஞர்கள் கூட்டம் ஓர் உயிருள்ள வாசிகசாலை – சீனா
- ஒருவனுடைய முகத்துக்கு நேராகச் சொல்வது அவதூறு அல்ல – சீனா
- மலிவானவை அனைத்தும் நல்லவையல்ல – சீனா
- பேசிய வார்த்தையானது கேட்பவர்களுக்குச் சொந்தமாகி விடுகின்றது – அமெரிக்கா
- நம்பிக்கை எதையும் துணிந்து செய்கிறது. அன்பு எதையும் பொறுத்துக் கொள்கிறது – அமெரிக்கா
- பேசுகின்றவன் விதைக்கிறான். கேட்பவன் அறுவடை செய்கிறான் – அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலோகங்களும் விசித்திர இயல்புகளும்

- ⊙ உலோகங்களிலேயே மிகவும் பாரமானது ஆஸ்மியம் எனும் உலோகமாகும்.
- ⊙ மிகவும் பாரம் குறைந்த உலோகம் லித்தியம்.
- ⊙ தங்கத்தை 0.00001 மில்லி மீற்றர் தடிப்புள்ள மெல்லிய தகடுகளாக ஆக்க முடியும்.
- ⊙ இரும்பு போன்ற உலோகங்கள் 1000 பாகை வெப்பநிலையில்தான் உருகும்.
- ⊙ பொட்டாசியம் தண்ணீரில் போட்டால் மிதக்கும் உலோகமாகும்.
- ⊙ சோடியம் என்ற உலோகம் காற்றினால் பாதிப்படைவதால்தான் அதை மண்ணெண்ணெயில் இட்டு வைக்கிறார்கள்.
- ⊙ தங்கம், பிளாட்டினம் போன்ற உலோகங்கள் அமிலங்கள், காரங்கள் போன்றவற்றால் பாதிப்படையாது.

என். ஆஷிக்,
தரம்-11, இறக்காமம்

உலக நாடுகளின் பழைய பெயர்கள்

பழைய பெயர்	புதிய பெயர்
இங்கிலாந்து	ஐக்கிய இராச்சியம்
ஸ்பானியா	ஸ்பெய்ன்
ஒல்லாந்து	நெதர்லாந்து
பர்மா	மியன்மார்
பாரசீகம்	ஈரான்
மொசபதேமியா	ஈராக்
பாரதம்	இந்தியா
அபிசீனியா	எத்தியோப்பியா
கம்பூச்சியா	கம்போடியா
கோல் நாடு	பிரான்ஸ்
கிரேக்கம்	கிறீஸ்
ஒரியானா	ஆப்கானிஸ்தான்
போமோசா	தாய்வான்
சீயம்	தாய்லாந்து
வடரொடீசியா	சாம்பியா
தென் ரொடீஸியா	சிம்பாப்வே

எம். பாத்திமதுஸ் ஸஹ்ரா,
தரம்- 08,
அல்மனார் ம.க, மருதமுனை

விந்தையான விஞ்ஞான தகவல்கள்

1. பச்சை நிறத்தில் மிளிரும் கோள் - யுரேனஸ்
2. இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்? - ராகேஷ் சர்மாவி
3. விண்ணுக்கு ஏவப்பட்ட முதலாவது விண்வெளி ஓடம் - ஸ்புட்னிக்- 1
4. விண்வெளிக்குச் சென்ற முதலாவது வயது முதிர்ந்த மனிதர் - ஜோன் இளேன் (77 வயது)
5. விண்வெளிக்கு ஏவப்பட்ட முதலாவது செயற்கைக் கோள் - ஆர்ய பட்டா
6. ஒளி வளையமுள்ள கோள் - சனி
7. சூரியனைச் சுற்றி கோள்கள் யாவும் உலா வருகின்றன என்பதைக் கூறிய விஞ்ஞானி - நிகலஸ் கொபர்னிகஸ்

எம்.யூ.எம். உபைத், தி/ அல்பத்தாஹ் ம.வி, நிலாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் அரபு மொழி

اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

إِنَّ وَأَخَوَاتُهَا இன்னும் அது சார்ந்த சொற்களும்

எனினும்	لَكِنَّ	போன்று	كَأَنَّ	என்று	أَنَّ	நிச்சயமாக	إِنَّ
(நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் பயன்படுத்தப்படும் சொல்)						சிலவேளை	لَعَلَّ
(நடைபெறாத ஒன்றை நினைத்து அங்கலாய்க்கப் பயன்படுத்தப்படும் சொல்)						இருக்கக் கூடாதா!	لَيْتَ

இவை الْمُبْتَدَأُ وَالْخَبَرُ வாக்கியங்களில் இணைந்து மாற்றத்தை ஏற்படுத்தும் சொற்களாகும்.

الْمُبْتَدَأُ وَالْخَبَرُ வாக்கியங்களில் இச்சொற்கள் இணைந்து வரும்போது, الْمُبْتَدَأُ ஆனது نَصْبٌ (ـَـ) உடைய நிலையிலும் الْخَبَرُ ஆனது رَفْعٌ (ـُـ) நிலையிலும் அமையப் பெறும்.

إِنَّ هَذَا الطَّالِبَ	جَدِيْدٌ
↓ إِسْمُ إِنَّ	↓ خَبَرُ إِنَّ

நிச்சயமாக இந்த மாணவன் புதியவன்
இந்த வாக்கியத்தில் வரும் الْمُبْتَدَأُ ஆனது إِسْمُ إِنَّ என்றும் الْخَبَرُ ஆனது خَبَرُ إِنَّ என்றும் அழைக்கப்படும்.

مُحَمَّدٌ طَالِبٌ	إِنَّ مُحَمَّداً طَالِبٌ ←	நிச்சயமாக முஹம்மத் ஒரு மாணவன்.
اَلْقَلَمُ جَمِيْلٌ	إِنَّ الْقَلَمَ جَمِيْلٌ ←	நிச்சயமாக பேனை அழகானது.
هَذِهِ السَّيَّارَةُ كَبِيْرَةٌ	إِنَّ هَذِهِ السَّيَّارَةَ كَبِيْرَةٌ ←	நிச்சயமாக இந்த வாகனம் பெரியது.
اَلْفَلاَّحُ قَوِيٌّ	إِنَّ الْفَلاَّحَ قَوِيٌّ ←	நிச்சயமாக விவசாயி பலமானவன்.
اَلْمُؤْمِنُ كَيِّسٌ	إِنَّ الْمُؤْمِنَ كَيِّسٌ ←	நிச்சயமாக முஃமின் புத்திசாதுர்யமிக்கவன்.
اَلْمُسْلِمُوْنَ أَقْوِيَاءُ	إِنَّ الْمُسْلِمِيْنَ أَقْوِيَاءُ ←	நிச்சயமாக முஸ்லிம்கள் பலசாலிகள்.
هَؤُلاَءِ الطَّالِبَاتُ مُسْلِمَاتٌ	إِنَّ هَؤُلاَءِ الطَّالِبَاتِ مُسْلِمَاتٌ ←	நிச்சயமாக இந்த மாணவிகள் முஸ்லிம்களாவர்.
اَلْبَيْتَانِ وَاسِعَانِ	إِنَّ الْبَيْتَيْنِ وَاسِعَانِ ←	நிச்சயமாக இரண்டு வீடுகள் விசாலமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

இதுவரை பார்த்த 8 வசனங்களினுள் اَلْمُبْتَدَأُ ஆனது நஸ்பு (نَصْبٌ) உடைய நிலையில் வந்திருப்பதை அவதானிக்க முடியும்.

பெயர்ச்சொல் இருமைக்குரிய نَصْبٌ உடைய அடையாளம் يْ வாகும்.

உயர்திணை பெண்பால் பன்மையின் نَصْبٌ உடைய அடையாளம் ـــِ பெற்று வரும்.

أَنَّ

இச் சொல் வாக்கியத்தின் இடையே வரக்கூடியதாகும்.

تَعَلَّمْتُ أَنَّ الْقُرْآنَ مُنَزَّلُ مِنْ عِنْدِ اللهِ

அல்குர்ஆன் அல்லாஹ்விடம் இருந்து இறங்கப்பெற்றது என கற்றுக் கொண்டேன்.

عَلِمْتُ أَنَّ صَدِيْقِي مَرِيْضٌ

எனது நண்பன் நோய்வாய்ப்பட்டுள்ளான் என்று அறிந்தேன்.

قَالَ / يَقُوْلُ அவற்றிலிருந்து பிரிந்து வரக்கூடிய சொற்களுக்குப் பின்னால் أَنَّ இணையும் போது إِنَّ என்ற அமைப்பிலேயே வரும்.

قَالَ الْمُدِيْرُ إِنَّ الْعُطْلَةَ تَبْدَأُ غَداً

விடுமுறை நாளை ஆரம்பிக்கும் என்று அதிபர் சொன்னார்.

يَقُوْلُ الْمُدَرِّسُ إِنَّ هَذَا الْمَسْجِدَ قَرِيْبٌ مِنَ الْمَدْرَسَةِ

இந்தப் பள்ளிவாயல் பாடசாலைக்கு அருகில் இருக்கிறது என்று ஆசிரியர் சொல்கிறார்.

أَنَّ என்ற சொல் வாக்கியத்தின் இடையே வரக்கூடியதாகும் எனினும் சத்தியம் செய்து சொல்லும் வார்த்தைக்குப் பின்னர் إِنَّ என்றே அமையப் பெற்றிருக்கும்.

وَاللهِ إِنَّ هَذَا الرَّجُلَ طَيِّبُ الْقَلْبِ

அல்லாஹ் மீது சத்தியமாக, நிச்சயமாக இந்த மனிதர் நல்ல உள்ளம் கொண்டவர்.

كَأَنَّ

كَأَنَّ الْكِتَابَ أُسْتَاذٌ

புத்தகம் ஓர் ஆசிரியரைப் போன்றது.

كَأَنَّ هَذِهِ الْمَدْرَسَةَ جَامِعَةٌ

இந்தப் பாடசாலை ஒரு பல்கலைக்கழகம் போன்றுள்ளது.

كَأَنَّ الْقَمَرَ مِصْبَاحٌ

சந்திரன் ஒரு விளக்கு போன்றது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Assalamu alaikum dear friends!
It's sports meet every where!! Are you enjoying the games?
Now tell me, why are **SPORTS** necessary?



- help us maintain physical fitness
- are a great form of entertainment.
- make every one participate together.
- improve body skills.
- give us personality.
- make us self disciplined
- make us win, when competitive!

SO PLAY, GET HEALTHY, GET SMART!!

Many people around the world are involved in sports professionally, and they receive great respect as 'sportsmen/women'.

Now shall we list out some sports?

	Athletics	**Indoor games**
Foot ball	✓ Race	✓ Chess
Hockey	✓ Relay	✓ Carom
Cricket	✓ Long jump	✓ Table tennis
Ruby	✓ High jump	✓ Karate
Volley ball		
Swimming		

Can you list out some more? And put your favourites at the beginning. And my favourite game is of course FOOT BALL!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Now for general knowledge, find out the host countries of the next three Olympic Games.

Olympics

Cricket joke

In school, the teacher asked Johnny to spell "bowling". Back came the answer: "B-o-e-l-i-n." "That," said the teacher, "is the worst spell of bowling I've ever seen."

Now, a little bit grammar.

Fill in the blanks with prepositions.

1. If you want to go [ ] bus, you have to go [ ] the bus stop.
2. You look [ ] the time table.
3. Then you wait [ ] your bus.
4. When the bus arrives, you get [ ] the bus.
5. You buy a ticket [ ] the driver or show your ticket [ ] the driver.
6. When you arrive [ ] your destination, you get [ ] the bus.
7. Sometimes you even have to change buses [ ] another bus stop.

Answers: by , to , at , for, on, from , to, at , off, at (courtesy- word wide web)

Your corner

Environmental pollution

Everything around us is the environment. There are three main components of the environment. They are, land, water and air.

Environmental pollution is the destruction of environment by men. Pollution makes the environment harmful for living organisms.

Land pollution occurs mainly due to the destruction of forests, soil erosion and unplanned, improper disposal of garbage. Increasing population is the main reason for the pollution. Desertification is another problem. In some areas rainfall decreases gradually and the land becomes barren.

Water pollution is caused by the various nuclear tests done in the ocean. In addition to that, accidents happen in the sea, and large amount of oil adds into the sea water. Releasing waste matter into the lagoons also pollutes the water resource. Atmospheric pollution is cased by smoke and gases from industries and vehicles. In recent years the use of motor vehicles has increased considerably. These vehicles exhaust carbon dioxide, and other toxic gases.



A polluted environment can cause many diseases. So let's protect the environment.

Fasra Lizan 10G, Naleem Hajiar LC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My favourite game

All children are fond of games. Different children like different games. They find games enjoyable and exiting. My favourite game is volleyball. I like this game. it is our national game. In this game, there are fourteen players involved , seven in each side. It is a game for strong healthy and intelligent girls and boys. It is interesting and funny game. I and my friends participate in it. I like the game very much.

Aamina Mubarak, 10-D, ST.Andrew's BMV, Nawalapitiya

HOW TO IMPROVE OUR LANGUAGE SKILLS

First of all, what we must to understand the meaning of language. Language is the form of human communication through the structured use of words. There are so many facilities to improve our language skills.

There are four types of language skills, they are:-

1. listening 2. writing 3. reading 4. speaking

It is important to study these 4 skills. ***"Seek Knowledge from Cradle to Grave"*** The well known saying states that one must improve knowledge from his childhood. If we get free time we can make it as golden times by improving these skills.

If we want to improve our listening, we should have the habit of listening to news and listening to others' conversation. The next is writing skills. If we want to improve our writing skill, we should have the habit of writing and also we should have to maintain a dairy or some kind of writing. Automatically we can improve our language skills by doing writing. Third is the reading skill. Reading is the most important and the best skill to all human beings. We should have this habit from our childhood. We want to read something that what we get from our surroundings. If it is hard, we can get help from others. Last is the habit of speaking. We can communicate with others. First of all we must give up our shyness and we should speak something with others who are fluent in that language. By improving these four skills, we can definitely improve our language skills.

RAIHANA IMRAN

13 ARTS (2012), **FATHIMA MUSLIM LADIES COLLEGE, COLOMBO-12**

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

10ம் தரம்

01. அருகிலுள்ள இந்தியப் படத்தில்A,B,C என்றஎழுத்துக்களால் குறிப்பிடப்படும் மகதப் பேரரசு காலத்தில் காணப்பட்ட 03 நாடுகளை அதே ஒழுங்கில் தருக. (3 புள்ளிகள்)



02. குப்தப் பேரரசை ஆட்சி செய்த 04 மன்னர்களை கீழே உள்ள அட்டவணையிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(அசோகன், 1ம் சந்திர குப்தன், 2ம் சந்திர குப்தன், பிம்பிசாரன், சமுத்திர குப்தன், குமார குப்தன்) (4 புள்ளிகள்)

03. அசோக மன்னனின் ஆட்சிச் சிறப்பை 2 உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

04. குப்தப் பேரரசின் சிறப்புக்களை பின்வரும் தலைப்புகளின் கீழ் விளக்குக.
அ. கல்வி ஆ. இலக்கியம் இ. கட்டடக்கலை

விடைகள்

01. A - சேர நாடு B - சோழ நாடு
C - பாண்டிய நாடு

02. 1ம் சந்திர குப்தன் 2ம் சந்திர குப்தன்
சமுத்திர குப்தன் குமார குப்தன்

03. சமயத்திற்கு ஆற்றிய சேவை

அசோகன் ஆரம்பத்தில் போர் வெறியனாக வாழ்ந்தான். படை பலத்தைப் பயன்படுத்தி பல பிரதேசங்களைக் கைப்பற்றினான். அரசனாகி பதின்மூன்றாவது ஆண்டில் அவன் கலிங்கத்தின் மீது படையெடுத்தான். அந்த யுத்தம் அவனது மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவன் பௌத்த சமயத்தைத் தழுவி, அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டான். திக் விஜயத்தைத் தவிர்த்து தர்ம விஜயங்களை மேற்கொண்டான். மூன்றாவது பௌத்த மகாநாட்டைக் கூட்டினான். பௌத்த சமயத்தைப் பரப்ப 09 நாடுகளுக்கு சமயத் தூதுக்குழுக்களை அனுப்பினான். இலங்கைக்கு தன் மகன் மகிந்த தேரரையும் மகன் சங்கமித்தையையும் அனுப்பினான். சாஞ்சி தூபி உட்பட பல தூபிகளை அமைத்தான்.

சிறந்த நிருவாகத்தை நடத்தியமை

அசோகன் (கி.மு. 273-236) இந்தியாவை சிறப்பாக ஆட்சி செய்தான். இந்தியாவை ஆட்சி செய்த மன்னர்களுள் சிறந்த நிருவாகத்தை மேற்கொண்டவன் அசோகன் ஆவான். அவன் அதிகாரங்களை பன்முகப்படுத்தி தன் ஆட்சியை நடத்தினான். மௌரியப் பேரரசு பல இராஷ்டிரங்களாகவும் (மாவட்டங்களாகவும்) பத்து ஊர்களாகவும் நூறு ஊர்களாகவும் நாற்பது ஊர்களாகவும் இருநூறு ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. கைத்தொழில், வர்த்தகம், வருமானம், உற்பத்தி, வெளிநாட்டு நடவடிக்கை, பிறப்பு இறப்பு என்பன ஆறு மண்டலங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு அசோகன் தனது நிருவாகத்தை பன்முகப்படுத்தி சிறந்த முறையில் மேற்கொண்டான்.

04. கல்வி

குப்தர் காலத்தில் கல்வி உன்னத வளர்ச்சியைக் கண்டது. நாலந்த, வலஹி முதலிய பல்கலைக்கழகங்கள் இக்காலத்தில் சிறப்பாகத் தொழிற்பட்டன. சீனாவைச் சேர்ந்த ஹியுங்சாங் என்பவர் நாலந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். பிராமணர்களே சாதாரண கல்வியை வழங்கினார்கள். சூத்திரர்களைத் தவிர அனைவருக்கும் கல்வி கற்க உரிமை இருந்தது. இலக்கணத்தைப் பிழையின்றிக் கற்றல் கல்வியின் அடிப்படையாக விளங்கியது. கலைத் திட்டத்தில் பரந்த விடயங்கள் இடம்பெற்றிருந்தன.

இலக்கியம்

இந்திய இலக்கிய வரலாற்றின் பொற்காலமாக குப்தர் காலம் விளங்கியது. இக்காலத்தில் பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதாரம் நன்கு வளர்ச்சியடைந்ததன் காரண மாக இலக்கியமும் வளர்ச்சியடைந்தது. இக்காலத்தி லேயே மகாகவி காளிதாசர் வாழ்ந்தார். அவர் மேகதூதம், இரகு வம்சம், குமார சம்பவம் ஆகிய சுவை மிகுந்த காப்பியங்களை எழுதி வட மொழி இலக்கியத்தை வளமூட்டினார். உலகின் சிறந்த இலக்கியப் படைப்புகளுள் ஒன்றான சகுந்தலை நாடகம் இக் காலத்தில் எழுதப்பட்டது.

கட்டடக் கலை

இக்காலத்தில் அதிகமான சமயக் கட்டடங்கள் தோற்றம் பெற்றன. இக்காலத்தில் புத்தகாய முதலிய புகழ்பெற்ற பௌத்த தூபிகள் கட்டப்பட்டன. அஜந்தா, எல்லோரா முதலிய குகை விகாரைகள் அமைக்கப்பட்டன. பௌத்த விகரைகளைக் கட்டுவதற்கு செங்கற்களும் தூபிகளும் பயன்படுத்தப் பட்டன. சமயக் கட்டடங்களில் அலங்கார செதுக்கல் வேலைகளைச் செய்வது இக்கால வழக்கமாக இருந்தது. அஜந்தா குகைக்கு 150 மைல் தொலைவில் அமைந்துள்ள பாக்குகைக் கோயில் இதற்கு சிறந்த உதாரணமாக உள்ளது.

11ம் தரம்

01. இராஜகாரிய முறையோடு தொடர்புடைய 02 ஆளுநர்களைத் தருக. (3 பள்ளிகள்)

02. கட்டாய இராஜகாரிய முறையை ஒழிப்பதற்கு ஆளுநர் நோர்த் குறிப்பிட்ட காரணிகளைத் தருக. (4 பள்ளிகள்)

03. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டை விளக்குக. (5 பள்ளிகள்)

04. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தியடைந்தமையினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் இரண்டை விளக்குக. (6 பள்ளிகள்)

விடைகள்

01. ஆளுநர் பிரட்ரிக் நோர்த், ஆளுநர் தோமஸ் மெரிற்லண்ட்

02. சில அதிகாரிகள் இராஜகாரிய முறையை தவறாகப் பயன்படுத்தியமை.

இராஜகாரிய முறை நவீன காலத்திற்குப் பொருத்தமற்ற அடிமை முறை போன்று காணப் பட்டமை.

இம்முறையினால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டமை. (உ-ம்) விவசாயிகள் இராஜ காரிய முறைக்காக வேலைக்கு சென்றமையினால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

03. கோல்புறூக் சிபாரிசுகள்

இலங்கையில் 1833ல் நடைமுறைக்கு வந்த கோல்புறூக் சிபாரிசுகளே பெருந்தோட்ட வளர்ச்சிக்கான அடிப்படைகளாக இருந்தன. முன்பு கறுவாவை உற்பத்தி செய்வதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் அரசுக்கு மாத்திரமே உரிமை இருந்தது. அந்த ஏக போக உரிமையை இல்லாமலாக்கிய கோல்புறூக் குழுவினர், தனிப்பட்டவர்களும் கறுவாவை உற்பத்தி செய்வதற்கு அனுமதியை வழங்கினர். மேலும் ஐரோப்பியர் இலங்கையில் நிலத்தை வாங்குவதற்கு உள்ள தடைகளையும் அகற்றினர். இதன் காரணமாக ஐரோப்பியரும் இலங்கையரும் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டினர். 1937ம் ஆண்டுக்குப் பின்பு அரசாங்க அதிகாரிகளும் வெளிநாட்டவர்களும் பெருந் தோட்டங்களில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தனர்.

தென்னிந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்தமை

ஆங்கிலேயர் 1940ம் ஆண்டின் பாழ்நிலச் சட்டத்தைப் பயன்படுத்தி மலையக சிங்களவரின் காணிகளைப் பலவந்தமாகப் பெற்றுக் கொண்டனர். இதனால் அதிருப்தியடைந்த சிங்கள மக்கள் பெருந் தோட்டங்களில் வேலை செய்ய மறுத்தனர். இதன் காரணமாக தென்னிந்தியாவிலிருந்து தமிழ் தோட்டத் தொழிலாளர்களை இலங்கைக்கு வரவழைத்தனர். குறைந்த கூலிக்கு அவர்கள் வேலை செய்ய ஒப்புக் கொண்டனர். இவ்வாறு இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்தமை பெருந்தோட்ட விருத்திக்கு காரணமாக அமைந்தது. 1871-1881 வரையிலான காலப்பகுதியிலேயே அதிகமான தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்தனர்.

04. ஏற்றுமதி வருமானம் அதிகரித்தது

முன்பு கறுவா முதலிய வாசனைத் திரவியங்கள் சிறிய அளவிலேயே ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆங்கிலேயர் தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய பயிர்களை பெருந்தோட்டங்களில் பெருமளவு உற்பத்தி செய்தனர். இதன் காரணமாக ஏற்றுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் பெருமளவு உயர்ந்தது. 1913ல் 2,20,000 ஏக்கரில் இறப்பர் பயிரிடப்பட்டது. ஐக்கிய அமெரிக்கா இலங்கையில் இறப்பரை அதிகம் கொள்வனவு செய்தமையால் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் அதிகரித்தது. 1910ல் இலங் கையில் 850,000 ஏக்கரில் தென்னை பயிரிடப் பட்டது. 1920ம் ஆண்டளவில் வெளிநாட்டு செலாவணி உழைப்பில் 27%ஐ தெங்கு ஏற்றுமதி கள் பெற்றுக் கொண்டன.

நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது

முன்பு அரசர்கள் நெல் உற்பத்திக்கு சேவை யாற்றுவதை தமது கடமையாகக் கொண்டனர். இதன் காரணமாக மகாசேனன், வசபன், தாதுசேனன் போன்றவர்கள் நெல் உற்பத்தியை அதிகரிக்க அதிகமான குளங்களைக் கட்டினர். இதனால் இலங்கையிலிருந்து நெல் வெளிநாடுகளுக்கு ஏற்று மதியாகியது. ஆனால், ஆங்கிலேயர் லண்டன் சந்தையை நோக்கமாகக் கொண்டு பெருந்தோட்டப் பயிர்களை உற்பத்தி செய்வதற்கே அதிக கவனம் எடுத்தனர். 1940ம் ஆண்டில் பாழ்நிலச் சட்டத்தை கொண்டுவந்து, மலையகத்தில் உள்ள நெல் விவ சாயக் காணிகளை பெருந்தோட்டங்களாக மாற்றி னர். ஆங்கிலேயர் பெருந்தோட்டச் செய்கையை அறிமுகப்படுத்தியதன் விளைவாக நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. ■

ஓர் ஏழைக்கு உதவுமே!



ஒருமுறை காந்தி ரயிலில் ஏறும்போது அவரது ஒரு செருப்பு நழுவி வெளியே விழுந்து விட்டது. ரயில் புறப்படத் தொங்கியதால் அதனை எடுக்க முடியவில்லை. மற்றைய பிரயாணிகள் அவரை ஆவலுடன் பார்க்கத் தொங்கினர். அவர் எவ்வித சஞ் சலமுமின்றி அமைதியாக தனது மற்றைய செருப்பையும் அதனருகே வீசியெறிந்தார்.

ஆச்சரியமடைந்த பயணிகள் தமது ஆவலை அடக்க முடியாமல், ஏன் அவ்வாறு செய்தீர்கள்? எனக் கேட்டனர். அவர் அமைதியாகச் சொன்னார்:

"ஒரு செருப்பைக் கண்டுபிடிக்கும் யாரோ ஓர் ஏழைக்கு சோடியாகக் கிடைத்தால் உதவுமே!"

என்ன தாராள மனசு! கிடைப்பது நிறைவாகக் கிடைக்க வேண்டும்; உதவுவதாகக் கிடைக்க வேண்டும்; இழந்ததை நினைத்து வருந்திப் பயனில்லை; ஒருவருக்கு இழப்பு மற்றவருக்கு பயனளிக்கும் என்றால் அதில் இன்னொன்றையும் இழந்து பயனளிக்கும் மனசு. ■

மனசாட்சி: நல்லதைத் தெரிவுசெய்யும் ஞானம்



ஆபிரகாம் லிங்கன் புகழ்பெற்ற வழக்கறிஞ ராக இருந்தவர். பல வழக்குகளை எதிர்கொண்டு வெற்றி பெற்றவர். அவர் தொழில்ரீதியான நிபு ணத்துவம் பெற்றவர். அவரிடம் ஒருவர் ஒரு வழக்கைக் கொண்டு வந்தார். வழக்கு விபரங்க ளைக் கேட்ட லிங்கன் சொன்னார்;

"நான் உங்கள் வழக்கைப் புரிந்து கொண் டேன். உங்கள் வழக்கு சட்ட ரீதியாக மிகவும் வலுவானது. இந்த வழக்கை நான் எடுத்து வாதிட்டால் இலகுவில் வெல்லலாம். ஆனால் இந்த வழக்கு அறநெறியின்படி பலவீனமானது; பொருத்தமற்றது. எனவே, இதை நான் எடுத்துக் கொள்ள மாட்டேன். ஏனெனில், இந்த வழக்கை வாதிடும்போது, "லிங்கன் நீ ஒரு பொய்யன். லிங்கன் நீ ஒரு பொய்யன்" என்று மனதின் ஆழத் திலிருந்து ஒரு குரல் எந்நேரமும் ஒலித்துக் கொண்டேயிருக்கும். என்னால் மனசாட்சிக்கு எதிராக செயற்பட முடியாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

மாணவர்களின் ஆளுமை விருத்தியில் தொடர்பாடல் திறன் (Communication Skills)

அறிவோடு சேர்த்து ஆளுமையையும் (Personality) விருத்தி செய்ய வேண்டும் என மாணவர்கள் எதிர் பார்க்கப்படுகின்றனர். ஆளுமை விருத்தி தொடர்பில் பன்நெடுங் காலமாகப் பேசப்பட்டு வருகின்ற போதும் இன்று அதன் முக்கியத்துவம் குறித்து மாணவர்கள் மத்தியில் அதிக கவனம் செலுத்தப் படுகிறது. இன்றைய வேலைத்தளங்களிலும் சமூ கத்தளத்திலும் அறிவால் மாத்திரம் தலையை நிரப்பியவர்களைவிட நல்ல ஆளுமைப் பண்புகளை நிரம்பப் பெற்றவர்கள் அதிகம் வரவேற்கப்படு கின்றனர். ஒரு காலத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெற வெறும் கல்விச் சான்றிதழ் தகைமைகள் எதிர் பார்க்கப்பட்டு அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்ட போதிலும் இன்று ஆளுமைப் பண்புகளுக்கும் முதன்மை கொடுக்கப்படுகின்றமை ஆழக் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

ஆளுமை (Personality) என்றால் என்ன?

'ஆளுமை' என்ற சொல் Personality என்ற ஆங்கிலச் சொல்லின் நேரடி மொழிபெயர்ப்பாகும். Personality என்ற ஆங்கிலப்பதம் 'முகமூடி' என்று பொருள் கொண்ட Persona என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியதாகும்.

ஒரு ஹீரோ திரைப்படமொன்றிலோ அல்லது நாடகமொன்றிலோ என்ன வேடத்தைப் போடு கின்றாரோ அவ்வேடத்திலேயே பார்வையாளர்கள் முன் அறிமுகமாகிறார். அது போலவே ஒருவர் தான் வாழும் சமூகத்திற்கு எந்த வேடத்தை வெளிப்படுத்துகிறாரோ அந்த சமூகத்தில் அதுவே அவருடைய ஆளுமையாகக் கருதப்படுகிறது. ஒருவர் முயல் போன்று முகமூடி அணிந்தால் அவர் முயல் போன்றும் மான் போன்று முகமூடி அணிந் தால் மான் போன்றும் காட்சி தருவார். அதுபோலவே ஒருவர் சமூகத்தில் தன்னை எவ்வாறு வெளிக் காட்டுகிறாரோ அதுவே அவருடைய ஆளுமை யாகக் கணிக்கப்படுகிறது என்பதே Personality என் பதன் பொருளாகும்.

ஆளுமை என்றால் என்ன என்பதற்கு பல அறிஞர் களும் பல வரைவிலக்கணங்களைக் கூறுகின்றனர்.

1. ஆளுமை என்பது மற்றவர்களிடமிருந்து பிரித்து ஒருவரின் தனித்தன்மையைக் காண்பிக்கும் முகமாக ஒருவர் தன்னை முன்னிறுத்துவதாகும்.
2. ஒருவரின் பிரத்தியேகமான, நீண்ட காலத்திற் குக் காணப்படக்கூடிய முரண்பாடற்ற சிறப் பியல்புகள்தான் ஆளுமையாகும்.
3. நீண்டதொரு காலத்திற்கு ஒரு நபரால் ஒன்றி ணைந்து தனித்துவமாகக் காணக்கூடிய மன வெழுச்சி, சிந்தனை மற்றும் நடத்தைசார் அமைப்புகளின் தொகுப்பாகும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ள வரைவிலக்கணங் களைத் தொகுத்துக் கூறுவதாயின் ஆளுமை என்பது ஒருவரது ஒன்றிணைந்த நடத்தையாகும். அது பரம் பரைத் திறன்களையும் சூழலின் தாக்கங்களையும் கொண்டது. அது அவனுடைய உடலமைப்பு, நடத்தைக் கோலங்கள், கவர்ச்சிகள், மனப்பாங்குகள், உளத்திறன்கள் விழுமியங்கள், சொற்கள், சொல்லும் முறை, பலவித சூழ்நிலைகளிலும் வெளிக்காண் பிக்கும் தன்னம்பிக்கை மற்றும் பல்வேறு இயல்புகள் ஆகியவற்றின் முழு அமைப்பாகும்.

ஆளுமைப் பண்புகள் பிறவியிலிருந்தே நம் மோடு உள்ளதா? அல்லது ஒருவரால் உருவாக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

கொள்ளப்படுகிறதா? என்ற வினா அறிஞர்களுக்கு மத்தியில் தொடர்ந்து விவாதிக்கப்படுகின்ற போதும் இரண்டும் கலந்திருக்கின்றன என்பது நடுநிலை பேணுவோரின் கருத்தாகும். இத்தகைய ஆளுமைப் பண்புகள் ஆளுக்காள் வித்தியாசப் படக்கூடிய தாகவும் நேரத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப வித்தியாசப்படக் கூடியதாகவும் விருத்தி செய்ய முடியுமானதாகவும் காணப்படுகிறது. இதனால்தான் ஒரு காலத்தில் மோசமானவனாக இருந்த ஒரு மனிதன் பிறிதொரு காலத்தில் நல்லவனாக மாறுவதைக் காண்கிறோம்.

ஆளுமை வளர்ச்சியில் பங்குகொள்ளும் காரணிகள்

1. உடலியற் காரணிகள்: நரம்புத் தொகுதிகளின் தொழிற்பாடு, குருதியோட்டம் ஆகியன ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கின்றன.
2. உடலமைப்பு: ஒருவருடைய உடல் வளர்ச்சிக்கமைய அவருடைய நடத்தைக் கோலங்களிலும் மாற்றம் ஏற்படுகிறது.
3. உளத்திறன்கள் 4. மனவெழுச்சிகள்
5. சூழற் காரணிகள் 6. வீட்டு வாழ்க்கை முறை
7. நாளமில்லாச்சுரப்பிகள்: உதாரணமாக, தைரொட்சின் மிகையாகச் சுரந்தால் கோபம் வரும்.

இவற்றோடு தன்னம்பிக்கை (Self confidence), நேர்க்கணியச் சிந்தனை (Positive Thinking), தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளல் (Learning From Failures), சுயநலமற்ற சேவை (Selfless services) என்பனவும் ஒருவரில் சிறந்த ஆளுமை உருவாகுவதில் பாதிப்புச் செலுத்துகின்றன.

சிறந்த ஆளுமை என்பது என்ன?

இதற்கு விடையளிப்பது கடினமாயினும் சிறந்த ஆளுமை சமூகத்தினால் தீர்மானிக்கப்படுகிறது. ஒருவனுடைய ஆளுமை அவனுடைய உடலியல், உளவியல் திறன்களிலும் தங்கியுள்ளது. உயிரியல் காரணிகள் சமூகச் சூழல் காரணிகளுடன் கொண்ட இடைவினையின் விளைவாகவே ஆளுமைக் கோலம் உருவாகிறது. பிறருடன் சுமுகமான தொடர்புகள் கொண்ட பிள்ளைகளின் ஆளுமைப் பண்புகள் பற்றி ஆய்வுகள் நடத்தப்பட்டன. இப் பண்புகள் நேர்மை இரக்கம், முகமலர்ச்சி, தாராள மனப்பான்மை, அடக்கம், கீழ்ப்படிவு, நம்பிக்கை, கவர்ச்சி மற்றும் சிறந்த தொடர்பாடல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

சிறந்த ஆளுமை உருவாக்கத்திற்கான அணுகுமுறைகள்

1. இலக்கைத் தீர்மானித்தல் - Goal Setting
2. நேர முகாமைத்துவம் - Time Management
3. தொடர்பாடற் திறன்கள் - Communication Skills
4. தலைமைத்துவப் பண்புகள் - Leadership Qualities

இவ்விடயங்கள் ஒரு மனிதனிடத்தில் சரியாக அமையப் பெறுமாயின் அவன் சிறந்த ஆளுமையுடையவனாகத் திகழ்வான் என்பதில் ஐயமில்லை. இலக்கை எவ்வாறு தீர்மானிப்பது? நேரத்தை முகாமைத்துவம் செய்வது எப்படி? என்ற விடயங்கள் அகரத்தின் சென்ற பல இதழ்களில் கலந்துரையாடப்பட்டன. இங்கு நாம் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளும் அம்சம் மாணவர்கள் தங்களைச் சிறந்த ஆளுமைகளாகக் காட்டிக் கொள்ள எவ்வாறான தொடர்பாடல் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும், அவற்றை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும்.

தொடர்பாடல் திறன் (Communication skill)

தொடாபாடல் திறன் என்பது தலைமைத்துவப் பண்புகளுள் முதன்மையானதும் முக்கியமானதுமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இப்பண்பு பொதுவாக மாணவர்கள் தங்கள் ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கும் குறிப்பாக, மாணவத் தலைவர்களுக்கும் ஏனைய தலைமைத் துவப் பதவி வகிக்கின்ற மாணவர்களுக்கும் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. தொடர்பாடலில் ஏற்டும் தடங்கல்கள், தவறுகளினால் உருவாகும் விளைவுகள் பாரதூரமானவை. இதற்கு நாளாந்த வாழ்க்கையில் பல உதாரணங்களை கண்டு கொள்ள முடியும்.

ஒரு விடயத்தைச் சொல்லும்போது பிழையாக விளங்கிக் கொள்ளும் ஒருவர் தான் விளங்கியவாறு செய்ய முயற்சிப்பார். முடிவில் நடக்க வேண்டும் என எதிர்பார்த்த விடயம் நடைபெற்றிருக்க மாட்டாது. இதுபோல் தகவல்களை வழங்கும் போது சரியான முறையில் வழங்காவிட்டாலும் இதே பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இறுதியில் தகவல் வழங்குபவர்களுக்கும் பெறுபவர்களுக்குமிடையில் முரண்பாடும் பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்பாக அது அமைந்து விடுகிறது.

எனவே, ஒருவரின் ஆளுமையை விருத்தி செய்வதற்கும் ஒரு காரியத்தை ஆக்கபூர்வமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுவதற்கும் தொடர்பாடல் திறன் மிக இன்றியமையாததாக இருக்கிறது.

தொடர்பாடலில் முக்கிய மூன்று தோற்றப் பாடுகள் காணப்படுகின்றன.

1. தகவல்களைப் பெறல்
2. தகவல்களைச் சேமித்து மீளப் பயன்படுத்தல்
3. தகவல்களை வழங்குதல்

1. தகவல்களைப் பெறல்

தொடர்பாடல் திறன்களில் தகவல்களைப் பெறுதல் முக்கியமான ஓர் அம்சமாகும். தகவல்களைப் பெறும்போது அல்லது உள்வாங்கும்போது அவற்றை முழுமையாக விளங்கிக் கொள்ள பல்வேறு வகையான நுணுக்கங்களை அவதானிக்க வேண்டும். தகவல் பரிமாற்ற நிகழ்வு வாய்மொழியாகவோ, எழுத்தாகவோ அல்லது சமிக்ஞையாகவோ இருக்கலாம். அவதானக் குறைவானது தகவல்கள் மறந்து போவதற்கும் ஞாபகத்தில் பதியப்படாமல் விடுபடுவதற்கும் காரணமாக அமைகிறது.

நீங்கள் பெற்றுக் கொண்ட தகவல்கள் மறக்காது அல்லது ஞாபகத்தில் பதியப்படாமல் விடாது என்பதை உறுதி செய்ய இரு வழிமுறைகள் உள்ளன.

1. குறிப்பெடுத்தல்: தகவல்களைப் பெறும்போது முக்கியமான தகவல்கள் (Key informations) எனக் கருதுபவற்றை எப்போதும் குறித்துக் கொள்ள வேண்டும்.
2. செவியுற்றதிலிருந்து நீங்கள் எதை விளங்கிக் கொண்டீர்கள் என்பதை திரும்பக் கூறுதல்.

இவ்வாறு தகவல்களைப் பெறும்போது இடம்பெறும் தொடர்பாடல் சிறப்பாக அமைய வேண்டுமானால், தகவல்களைக் கூறுபவர் சுதந்திரமாகப் பேசுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பின்வரும் அம்சங்கள் பேசுபவர்கள் சுதந்திரமாகப் பேசுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

- உடம்பை சற்று முன்னால் வளைத்தல், கவனத்தை நன்கு செலுத்தல், குறிப்பெடுத்தல் மற்றும் இது போன்ற செயற்பாடுகள் மூலம் ஆர்வத்தை வெளிப் படுத்தல்.
- புதிய கருத்துக்களையும் சிந்தனையையும் பேசுபவர் வெளிப்படுத்தும்போது Superb!, Wow!, excellent! போன்ற வார்த்தைகளைக் கூறி ஆர்வத் தோடு வரவேற்றல்.
- கண் தொடர்பைப் பேணல் (Keep eye contact). பேசுபவரின் கண்ணைப் பார்த்தவாறே செவிமடுத்தல்.
- புன்முறுவல் செய்தல், அமைதியாகவும் ஆறுதலாகவும் Friendly ஆகவும் இருத்தல்.
- பேசும்போது தொடர்பறாத வண்ணம் கவனத்துடன் காது கொடுத்தல்.

அல்லாஹ் மனிதனுக்கு ஒரு நாவையும் இரண்டு கண்களையும் இரு காதுகளையும் கொடுத்துள்ளான். அதிகம் கேட்டு, அதிகம் பார்த்து அளவோடு பேச வேண்டும் என்பதற்காகவே. சிலர் அடுத்தவர்கள் பேசும்போது அதை அவதானிக்க மாட்டார்கள். அது அவசியமற்ற பேச்சு என்பது போல் முகத்தைத் திருப்பிக் கொள்வர். அல்லது கவனத்தை வேறு திசையில் செலுத்துவர். பேசுபவர் பேச்சை முடிக்கும் முன்னரே பக்கத்தில் இருக்கும் மறொருவரிடம் வேறு ஒரு விடயம் பேச ஆரம்பிப்பார் அல்லது பேச்சை இடையில் நிறுத்தி தான் பேச ஆரம்பிப்பார். இத்தகைய செயற்பாடுகள் பேசுபவரின் பேச்சையும் அவரையும் இழிவுபடுத்துவதாக அமையும். எனவே உங்கள் சகோதரன் பேசும்போது அவனது பேச்சை ஆர்வத்துடனும் அவதானத்துடனும் கேளுங்கள்.

02. தகவல்களைச் சேகரித்தலும் மீளப் பெறுதலும்

நீங்கள் பெற்றுக் கொண்ட தகவல்கள் பின்னர் பயன்படுத்தத் தேவைப்படும்போது மீட்ட வேண்டி ஏற்படலாம். தகவல்களச் சேமித்து மீளப் பெறுவதற்கு இன்று பல வழிமுறைகள் காணப்படுகின்றன. கணினிகளை இதற்கான உதாரணமாகக் குறிப்பிடலாம். எந்த மொழியைப் பயன்டுத்துகிறீர்கள் என்பது இங்கு முக்கியமாகக் கருதப்படுவதில்லை. தகவல்களைச் சேமிக்கவும் தேவையானபோது மீட்டவும் பல நுட்பங்களைப் பயன்படுத்தலாம்.

உதாரணமாக குறிப்பெடுத்தல், மனனம் செய்தல், ஒலி, ஒளிப்பதிவு செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்

தொடரும்...

> உடம்பிலே ஒரு சதைப் பிண்டம் உள்ளது அது சீரடைந்து விட்டால் முழு உடம்பும் சீராகிவிடும்; அது சீர் கெட்டு விட்டால் முழு உடம்பும் சீர் கெட்டு விடும் அதுதான் உள்ளம் (கல்ப்) ஆகும். (புகாரி, முஸ்லிம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (R) Spl.Trd.Com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஒவ்வோர் ஆண்டும் ஏதோ ஓர் விடயத்திற் காக பிரகனப்படுத்தப்படுவது வழமை. அவ்வகையில் 2012ம் ஆண்டை 'மும்மொழி இலங்கைக்கான ஆண்டாக' ஜனாதிபதி அவர்கள் 2012.01.21 அன்று பிரகடனப் படுத்தியதுடன் மும்மொழி இலங்கை ஒன்றுக்கான பத்தாண்டு வேலைத்திட்ட மும் ஆரம்பிக்கப்பட்டது.



- 2011 டிசம்பரில் விண்வெளியில் பூமியை ஒத்த புதிய கிரகம் இருப்பதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா உறுதிப்படுத் தியுள்ளது. இதற்கு கெப்லர் 22-பி எனப் பெயரிட்டுள்ளனர்.

- 2012 ஜனவரியில் பல்தர தொழிற்பாட்டு தொலைத் தொடர்பு கோபுரம் நிர்மாணிப்பதற்கான அங்குரார்ப் பண நிகழ்வு இடம்பெற்றது. இது தாமரைக் கோபுரம் (Nelum Kuluna) எனப் பெயரிடப்பட்டதுடன் தெற்காசியாவிலேயே மிக உயர்ந்த கோபுரமாக விளங்கும். 350 மீற்றர் கள் உயரம் கொண்ட இக்கோபுரம் உலகில் 19வது உயரமான கோபுர மாக விளங்கும். 104.3 அமெரிக்க டொலர் செலவில் மக்கள் சீனக் குடியரசின் எக்ஸிம் வருகியின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ளது. இக் கோபுர நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 30 மாதங்களுக்குள் பூர்த்தியாக்க திட்டமிடப் பட்டுள்ளது. உலகில் மிக உயரமான கோபுரமாக ஜப்பானின் டோக்கியோவில் உள்ள Sky Tree கோபுரம் விளங்குகின்றது.
- 2011 டிசம்பரில் தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கு (Nelum Pokuna) திறந்து வைக்கப் பட்டது. இது 3.08 பில்லியன் ரூபா செலவில் மக்கள் சீனக் குடியரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது. இக்கலையரங்கு 12ம் நூற்றாண்டில் பராக்கிரமபாகு மன்னனால் பொலநறுவையில் நிர்மாணிக்கப்பட்ட தாமரைத் தடாகத்தை ஒத்த வடிவில் நிர்மானிக்கப்பட்டுள் ளது. இதுவே இலங்கையின் முதலாவது அரச கலையரங்கமாக அமையும். ஏனைய கலைய ரங்குகளாக Tower Hall, Elpinstion, BMICH என்பன விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெலும் பொகுண



இலங்கையின் பாடசாலைக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்படும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் 2012 பெப்ரவரியில் முதலாவது பாடசாலையாக அநுராதபுரம் வலிஸிங்க ஹரிச்சந்திர கல்லூரி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

டைட்டானிக் கப்பல் விபத்தைப் போன்று 'கொஸ்டா கொன்கோர்டியா' எனும் கப்பல் 2012 ஜனவரியில் மத்திய தரைக் கடலில் கவிழ்ந்தது. அதில் 4000ற்கும் அதிகமான பயணிகள் மீட்கப்பட்டதுடன் 24 மணி நேரத்திற்கு பின்னர் தென் கொரிய ஜோடியும் உயிருடன் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



இயற்கை அழிவுகளின் ஓர் அங்கமாக 2012 பெப்ரவரியில் ஐரோப்பிய நாடுகளில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டது. இதனால் இத்தாலி, உக்ரைன், பல்கேரியா, போலந்து, துருக்கி, பொஸ்னியா மற்றும் சேர்பியா ஆகிய நாடுகள் பாதிக்கப்பட்டதுடன் 96 பேர் வரை பலியாகினர்.

சார்க் பிராந்திய நாடுகளுள் ஒன்றான மாலைதீவில் 2012 பெப்ரவரியில் ஆட்சி மாற்றம் இடம்பெற்றது. மைமூன் அப்துல் கையூமின் எதேச்சாதிகாரத்திற்கு எதிராக புரட்சி வீரராக, ஜனாதிபதியாக விளங்கிய முஹம்மத் நஷீதின் ஆட்சியில் ஊழல் முறைகேடுகள் நிலவியதாகவும் அதிகார துஷ்பிரயோகம் மலிந்திருந்ததாகவும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை அடுத்து துணை ஜனாதிபதியாக இருந்த முஹம்மத் வாஹித் ஹஸன் தற்போது புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ளார்.

அமெரிக்க நியூயோர்க் நியூ ஜேர்சி பிரதேசத்தை சேர்ந்த பாடகியும் நடிகையுமான விட்னி எலிசபெத் ஹுஸ்டன் 2012 பெப்ரவரியில் மரணமானார். இவர் இசைத் துறையில் ஆறு கிரம்மி விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத் துறையில் அற்புத ஆற்றல்களை வெளிப்படுத்துவோருக்கு வழங்கப்படும் லோரியஸ் விருதின் 2012 ஆம் ஆண்டுக்கான விருது விழாவில் வழங்கப்பட்ட விருதுகளும் பெற்றவர்களும் வருமாறு.

- வருடத்தின் அதிசிறந்த வீரர் விருது - நொவாக் ஜெக்கோவிக் (டென்னிஸ் வீரர்- சேர்பியா)

- அதிசிறந்த வீராங்கனை - விவியன் செரியொட் (மத்திய தூர ஓட்ட வீராங்கனை - கென்யா)

- மாற்றுத் திறனாளி விருது - ஒஸ்கார் பிஸ்டோரியஸ் (தென்னாபிரிக்கா)
- சிறந்த அணிக்கான விருது - பார்சிலோனோ கழகம் (ஸ்பெய்ன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எஸ்.எம்.ஏ. ஸலாம், மாவனல்லை

ஒருங்கமை சமன்பாடுகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஒருங்கமை சமன்பாடுகள் பின்னமாகவோ தசமங்களாகவோ தரப்படினும் விடையளிப்பதற்கு சில அடிப்படை அறிவு தேவையாகும். பொ.ம.சி. காணுதல், தசமங்களை முழு எண்களாக மாற்றுதல் போன்ற மேலும் சில உத்திகள் தேவைப்படலாம்.

உ+ம் $\frac{1}{3}x+\frac{1}{5}y=5\frac{4}{5}$ —— (1)

$\frac{2}{5}x-\frac{1}{4}y=5$ —— (1)

எனும் இரு சமன்பாடுகளையும் நோக்குவோம்.

(1)ம் சமன்பாட்டில் பின்னமல்லாத ஒரு சமன்பாட்டைப் பெறுவோம்.

(1) இல் $\frac{5x+3y}{15}=\frac{29}{5}$

∴ $5x+3y=\frac{29}{5}\times 15$

இதேபோல் $5x+3y=29\times 3$ —— (a)

(2) இல் $\frac{8x-5y}{20}=5$

∴ $8x-5y=20\times 5$ —— (b)

இங்கு y எனும் தெரியாக் கணியம் நீக்கப்பட x எனும் கணியத்தைக் கொண்ட ஒரு எளிய சமன்பாடு பெறப்படலாம்.

$(a)\times 5$:- $25x+15y=29\times 3\times 5$ —— (3)

$(b)\times 3$:- $24x-15y=20\times 5\times 3$ —— (4)

கூட்டலால் $49x=29\times 3\times 5+20\times 5\times 3$ (xxx)

$=5\times 3(29+20)$ (xxx)

$49x=15\times 49$

∴ $x=\frac{15\times 49}{49}$

$x=15$

x இன் பெறுமதியை சமன்பாடு (a) இல் பிரதியிடுவதால்

$5x+3y=29\times 3$ —— (a)

$5\times 15+3y=29\times 3$

$3y=29\times 3-5\times 15$

$=87-75$

$3y=12$

$y=\frac{12}{3}$

$y=4$

∴ $\begin{Bmatrix} x=15 \\ y=4 \end{Bmatrix}$

மேலே காட்டியவாறு பின்னங்களாக அமைந்த ஒருங்கமை சமன்பாடுகள் பரீட்சை வினாக்களில் காணப்படுவது அரிது. எனினும், நாம் இதுபோன்ற பயிற்சிகளில் எம்மை வளப்படுத்துவதன் மூலம் எந்தப் பரீட்சையையும் முகம் கொள்ளத் தயாராக இருத்தல் நன்று.

மேலே நாம் பொ.ம.சி காணுதல், (xxx) என குறியிடப்பட்டுள்ள இடங்களில் காரணி அறிவைப் பயன்படுத்துவதன் மூலம் பெருக்கல்களைத் தவிர்த்துக் கொள்வது போன்ற உத்திகளைக் கையாள்கிறோம்.

வேடிக்கை நிகழ்ச்சி ஒன்றில், 8 சிறுவர்களுக்கும் 5 வயது வந்தோருக்குமான மொத்த நுழைவுக் கட்டணம் ரூபா 410.00ஆகும். சிறுவர் எண்ணிக்கை 3 இனாலும் வயது வந்தவர் எண்ணிக்கை 1 இனாலும் அதிகரித்தபோது நுழைவுக் கட்டணம் ரூபா 520.00 மொத்தமாகத் தேவைப்பட்ட எனின்,

1. சிறுவர் ஒருவருக்கானதும் வயது வந்தோர் ஒருவருக்கானதுமான நுழைவுக் கட்டணங்களைக் காண்க.
2. ரூபா 300.00ஐப் பயன்படுத்தி மிகுதி இன்றி பெறக்கூடிய சிறுவருக்கான நுழைவுக் கட்டணங்களினதும் வயது வந்தோருக்கான நுழைவுக் கட்டணங்களினதும் எண்ணிக்கை கட்டண மாதிரிகள் இரண்டைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கை: சிறுவர் ஒருவருக்கு ரூபா x எனவும் வயது வந்தவர் ஒருவருக்கு ரூபா y எனவும் நுழைவுக் கட்டணப் பெறுமதிகளைக் கொள் வோமாயின்,

$$8x+5y=410 \quad \text{———} (1)$$

$$3x+y=520-410$$

$$\therefore \quad 3x+y=110 \quad \text{———} (2)$$

$$(2)\times 5:-15x+5y=550$$

$$(1):-\ 8x+5y=410$$

கழித்தலால் $7x=140$

$$x=20$$

x இன் பெறுமதியை (2)இல் பிரதியிடுக.

$$3x+y=110$$

$$3\times 20+y=110$$

$$60+y=110$$

$$y=110-60$$

$$y=50$$

∴ சிறுவர்களுக்கான கட்டணம் ரூபா 20

வயது வந்தோருக்கான கட்டணம் ரூபா 50

3. ரூபா 300க்கான சிறுவர் எண்ணிக்கை a எனவும் வயது வந்தோர் எண்ணிக்கை b எனவும் கொள்வோம்.

$$20a+50b=300$$

$$2a+5b=30 \quad \text{———} \ xxx$$

$a=10$ எனின்

$$2\times 10+5b=30$$

$$20+5b=30$$

$$5b=30-20$$

$$5b=10$$

$$b=2$$

$$\begin{Bmatrix} a=10 \\ b=2 \end{Bmatrix}$$

இதேபோல் $a=5$ எனின்

$$2\times 5+5b=30 \quad \text{———} \ xxx$$

$$10+5b=30$$

$$5b=30-10$$

$$5b=20$$

$$b=4$$

$$\begin{Bmatrix} a=5 \\ b=4 \end{Bmatrix}$$

எண்ணிக்கைகளுக்கான மாதிரிகள்

$(10,2)$; $(5,4)$

அதிகூடிய தூரம் போக

ஆசிரியர்: பிள்ளைகள் பெருக்கல், பிரித்தல் பயிற்சிகளை நாம் செய்து கொண்டிருக்கி றோம். சரி, எல்லோரும் கவனமாகக் கேளுங்கள். கார் ஒன்று 15.கி.மீ. தூரம் செல்ல 1 லீற்றர் பெற்றோல் தேவை. அப்படியென்றால் 5 லீற்றர் பெற்றோல் பயன்படுத்தி செல்லக்கூடிய அதி கூடிய தூரம் பெறுவதற்கு என்ன செய்ய வேண் டும். ஜலால் நீ சொல்லு பார்ப்போம்.

ஜலால்: அது சேர், இறக்கத்தில போகும் போது என்ஜின ஓஃப் பண்ணி நீயூட்டல்ல போகோணும்

ஆசிரியர்: ??? ம்ம்ம்

(விடை: பெருக்க வேண்டும் 15X5= 75 கி.மீ.)

"உங்களில் ஒருவர் தனக்கு விரும்புவதையே தம் சகோதரனுக்கும் விரும்பாத வரை முழுமையான இறை நம்பிக்கையாளராக மாட்டார்" என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "இலகுவாக்குங்கள்; சிரமத்தைக் கொடுக்காதீர்கள். மேலும் நல்லவற்றையே சொல்லுங்கள்; சலிப்படைந்து ஓடிவிடுமாறு செய்யாதீர்கள். வெறுப்பூட்டாதீர்கள்!

"கற்றுக் கொள்வதற்கு வெட்கப்படுபவனும் எல்லாம் தெரியும் என்று அகந்தை கொள்பவனும் கல்வியைக் பெற்றுக் கொள்ளவே மாட்டான்." இமாம் முஜாஹித் (ரஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜே.எம். அஸீம் (நளீமி)

போட்டியிட்டு வளர்வோம்: வெற்றிகள் நமதாகும்

போட்டி உணர்வு எம்மை எப்போதும் உற்சாகமாக இலக்கு நோக்கிப் பயணிக்க உதவும். போட்டிகளின்போதுதான் மறைந்திருக்கும் எமது திறமைகள் மிகச் சிறந்த முறையில் உயர்ந்த அளவுகளில் வெளிப்படும். போட்டி உணர்வானது எம்மை எப்போதும் உயிர்த்துடிப்புடன் இயக்கும். எம்மை இயங்காற்றல் (Dynamic) உள்ள ஆளுமையாக செயற்பட வைக்கும். போட்டிகளில் கிடைக்கின்ற வெற்றியோ தோல்வியோ தொடர்ந்தும் இலக்கு நோக்கி இயங்கச் செய்யும்.

போட்டியிட்டு எம்மை வளர்த்துக் கொள்வதால் நாம் பல நன்மைகளை அடைந்து கொள்ள முடியும். ஏனெனில், போட்டியிட்டுக் கொண்டிருக்கும் நாம் இடையில் அதனைக் கைவிட்டுவிட முடியாது. வெற்றியோ தோல்வியோ இறுதி இலக்கு வரை பயணித்தேயாக வேண்டும். மாணவர்களுக்கு கற்றலில் ஏற்படும் போட்டி உணர்வானது அவர்களை தமது கற்றலின் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் விடாமுயற்சியையும் தொடர்ந்தும் தூண்டிக் கொண்டிருக்கும்.

முயற்சிகள் இடைநடுவே கைவிட்டுவிடப் படாமல் இருக்க போட்டியிட்டுப் படிப்பது உதவும். கற்றலில் மாத்திரமன்றி எமது ஆற்றல்கள் (Skills) பலவற்றை வளர்ப்பதற்கும் போட்டிகள் உதவலாம். உதாரணமாக பேச்சாற்றலை வளர்க்க பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்வது போல, எழுத்தாற்றலை வளர்க்க கட்டுரைப் போட்டிகளில் பங்குகொள்வது போல நாம் பல போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு எமது ஆற்றல்களை போட்டியிட்டு வளர்க்கலாம்.

போட்டி என்பது இன்று ஆரோக்கியமற்றதாக மாறிவிட்டமை கவலையளிக்கிறது. போட்டி இன்று பொறாமையின் மறுவடிவமாகக் காட்சியளிக்கிறது. மற்றவர்களை வீழ்த்தியே தான் முன்னேற வேண்டும் என்ற இழிவான சிந்தனைகள் மாணவர் மனங்களில் பதிக்கப்பட்டுள்ளது. விளையாட்டின் மூலம் பண்பாடும் நல்லொழுக்கமும் கற்பிக்கப்படுவதற்குப் பதிலாக வெறியும் பெருமையும் ஊட்டப்படுகிறது. எனவே, போட்டி உணர்வை உண்மையாக, உணர்வுபூர்வமாக வளர்ப்பதற்கான சில விடயங்களைப் பார்ப்போம்.

குழுவாகப் போட்டியிடுங்கள்

நீங்கள் முன்னேற வேண்டும் என்று நினைத்தால் உங்களோடு ஒத்துழைத்து இணங்கிப் போகின்ற ஒரு குழுவாக இணைந்து உங்களுக்குள் போட்டியிடுங்கள். பின்னர் உங்கள் போட்டி வெற்றியளிக்கின்றபோது நீங்கள் அனைவரும் இணைந்து மற்றவர்களோடு போட்டி போடுங்கள். உதாரணமாக கற்கின்ற நீங்கள் உங்களுக்குள் 04, 05 பேராக சேர்ந்து குறிப்பிட்ட இலக்கை நிர்ணயித்து அதனை அடைவதற்காகப் போட்டியிடுங்கள். போட்டியிடும்போது குறிப்பிட்ட இலக்கை யார் முதலில் அடைந்தாலும் அது உங்கள் குழுவுக்குக் கிடைத்த வெற்றி என்று எண்ணி முதலில் வெற்றி பெற்றவரை ஆதரியுங்கள்; அவரை ஊக்கப்படுத்துங்கள்.

எதிர்ப் போட்டியாளருக்கும் உதவுங்கள்

உங்களை எதிர்த்துப் போட்டியிடுகின்ற மற்றைய போட்டியாளருக்கு உதவி செய்யுங்கள். நீங்கள் உதவி செய்வதால் உங்கள் வெற்றி பறிபோவதில்லை என்பதையும் மாறாக, அவர் வென்றாலும் அதில் உங்கள் பங்கு உள்ளது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். உண்மையான வெற்றி என்பது எதிர்ப் போட்டியாளரை வீழ்த்தி நீங்கள் வெல்வதல்ல. மாறாக அவருக்கு உதவி செய்து நீங்கள் வெல்வதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமையைக் களையுங்கள்

நீங்கள் மற்றவர்களைக் கண்டு பொறாமைப் படுவதாலோ அவர்களுக்கு எதிராக முயற்சி செய்வதாலோ சிறந்த வெற்றிகளையோ சிறந்த அடைவுகளையோ பெறலாம் என்று எண்ணி விடாதீர்கள். தூய்மையற்ற உள்ளத்தோடும் பொறாமை உணர்வோடும் போராடுவது நற்குண மல்ல. எனவே, வெற்றிக்காக உழைக்கும் நீங்கள் உண் மையாக உழையுங்கள்; தளராது முயற்சி செய்யுங்கள்.

வெற்றி பெற்றவரைப் பாராட்டுங்கள்

தோல்வியாளர்கள் என்போர் சில பண்புகளைப் பெற்றிருப்பர்; வெற்றியாளர்களும் அவ்வாறே சில பண்புகளைப் பெற்றிருப்பர். வெற்றி பெற்ற வரைப் பாராட்டுவது வெற்றியாளர்களின் பண்பு. வெற்றி பெற்றவர்கள் மீது பொறாமைப்படுவது தோல்வியாளர்களின் குணம். எனவே, நீங்கள் வெற்றியாளரா அல்லது தோல்வியாளரா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

பிறரிடமிருந்து பெறுவதற்கும் தயங்காதீர்கள்

போட்டி என்பதால் நான் யாரிடமிருந்தும் எந்த உதவியும் பெறமாட்டேன் என்ற வரட்டுப் பிடி வாதத்திலும் இருக்க வேண்டாம். போட்டி ஆரோக்கியமானதாக அமைய வேண்டுமே தவிர, பிழையான சிந்தனை கொண்டதாக அமையக் கூடாது உங்களை, உங்கள் ஆற்றலை வளர்ப்பதாக அமைய வேண்டுமே தவிர உங்க ளுக்குள் தாழ்வு மனப்பான்மையையும் தோல்வி உணர்வையும் வளர்ப்பதாக போட்டி அமையக் கூடாது. நற்பண்புகளை வளர்ப்பதற்காக போட் டியிட வேண்டுமே தவிர, தீய உணர்வுகளை வளர்ப்பதாக போட்டிகள் அமையக் கூடாது.

போட்டிகளால் வளருங்கள்

போட்டி என்பது குறுகிய வெற்றி, தோல்வி களுக்காக அல்ல என்பதையும் உங்கள் ஆற்றல்கள், ஆளுமைப் பண்புகளை வளர்ப்பதற்காகவுமே என்பதையும் மனதில் இருத்துங்கள். போட்டியி டும்போது ஏற்படும் அனுபவங்களை மற்றவர்க ளோடு பகிர்ந்து கொள்ளுங்கள். வெற்றியோ தோல் வியோ அதற்கான காரணங்களை ஆராயுங்கள்.

பொழுதுபோக்காகப் போட்டியிடுங்கள்

போட்டி என்பதை எப்போதும் இறுக்கமான தாகவும் வெறியாகவும் பார்க்காமலிருக்க பொழு துபோக்காகவும் பொழுதுபோக்கு விடயங்களிலும் போட்டியிடுங்கள். அவற்றின் வெற்றி, தோல்விகள் அதிக தாக்கம் மிக்கவையல்ல.

ஜப்பானியர்கள் இவ்வாறான போட்டி மனப்பாங்கில் அதிக ஆர்வம் உள்ளவர்கள். அவர்கள் தங்களுக்குள்ளே போட்டியிடுகின்றனர். அவ்வாறே ஏனையவர்களோடும் போட்டியிடு கின்றனர். போட்டி அவர்களை வளர்க்கிறது; உயர்வடையச் செய்கிறது.

நீங்கள் விரும்பியோ விரும்பாமலோ இது போட்டிகள் நிறைந்த உலகு. கல்வி உலகிலும் தொழில் உலகிலும் போட்டிகள் நிறைந்துள்ளன. உங்களை அத்தகைய போட்டிகளுக்குத் தயாராக் கிக் கொள்ள வேண்டுமானால் மாணவப் பருவத் திலேயே இத்தகைய ஆரோக்கியமான போட்டி களில் பங்கெடுங்கள்.

போட்டிகளுக்கான திறந்த பல களங்கள் கல்விச் சூழலிலே நிறைந்து இருக்கின்றன. பாடசாலை மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என பல்வேறு மட்டங்களிலும் மொழித்தினப் போட்டி, இலக்கியப் போட்டி, சித்திரப் போட்டி, விளையாட்டுப் போட்டி என பல்வேறு வகை யான போட்டிகளும் காணப்படுகின்றன. எனவே, மாணவர்களாகிய நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான், அதுதான் போட்டியிடுவது, போட் டிகளில் பங்கெடுப்பது. தற்காலிகத் தோல்விகள் என்றும் நிரந்தரமானவையல்ல. உண்மையான வெற்றி இலகுவில் கிடைப்பதுமில்லை.

போட்டிகள் அன்பை வளர்ப்பதாகவும் நட்பை மேம்படுத்துவதாகவும் அமைய வேண்டும். நபியவர்கள் ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களோடு ஓட்டப் போட்டியில் ஈடுபடுவார் கள். சிலபோது நபியவர்கள் வெல்வார்கள். சிலபோது ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை வெல்ல விடுவார்கள்.

வெற்றியாளர்கள் என்றும் நற்பண்புள்ளவர்க ளாகவே திகழ்வர். எனவே, நீங்கள் வெற்றியாளரா கத் திகழ வேண்டுமென்றால் நற்பண்புள்ளவராக இருக்க வேண்டும். போட்டியிடும்போதும் அத் தகைய நற்பண்புகளைத் தவறவிட்டுவிடக் கூடாது. நற்பண்புகளை, ஒழுக்கங்களைத் தவற விட்ட வெற்றியால் பலனேதுமில்லை. போட்டி என்பது உங்களை வளர்ப்பதற்காகவும் உங்கள் ஆற்றல்கள், ஆளுமைப் பண்புகள் என்பவற்றை மேம்படுத்தவுமே என்பதை மனதில் ஆழமாகப் பதியுங்கள். போட்டி பெற்று வெற்றிபெற வாழ்த்துக்கள்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: நஸ்ரா நிஸாமுதீன் BA (Hons) PGDE

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

தனிப் பாடற்றிரட்டு

பின்வரும் பாடலை சந்தி பிரித்து எழுதுக.

காரென்று பேர்படைத்தாய் ககனத்துறும்போது

நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்தற்பின்

வாரென்று மென்முலையாராய்ச்சியர்கை வந்ததற்பின்

மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே

◆ அடிக்கோடிட்ட வரிகளுக்குரிய சொற்களை கவனிக்க. அவை சந்தி பிரிக்க வேண்டிய இடங்கள். சந்தி பிரித்து எழுதுவோம்.

விடை:

கார் என்று பேர் படைத்தாய் ககனத்து உறும்போது

நீர் என்று பேர் படைத்தாய் நெடும் தரையில் வந்ததன் பின்

வார் ஒன்று மென்முலையார் ஆச்சியர் கை வந்ததன் பின்

மோர் என்று பேர் படைத்தாய் முப்பேரும் பெற்றாயே

● "கார் என்று..." என்று தொடரும் பாடலில் காணத் தகு அரும்பதங்களுக்குப் பொருள் கூறுக.

விடை:

▲ கார் ▶ மேகம் (மழைமேகம்)

▲ ககனம் ▶ வானம்

▲ வார் ▶ கச்சு

▲ நெடும் ▶ நீண்ட

● "கார் என்று பேர் படைத்தாய்..." என்று தொடரும் பாடலைப் பாடியவர் யார்?

விடை:

காளமேகப் புலவர்

● இப்பாடலின் பொழிப்புரையை எழுதுக.

விடை:

(இடைச்சியின் மோரே!) வானத்தில் இருக்கும் போது மேகம் என்றும் நீண்ட நில உலகத்தில் நீ வந்ததன் பின் நீர் என்றும் கச்சணிந்த மென்மையான தனங்களை உடைய இடைச்சியர் கையில் வந்ததன் பின் மோர் என்னும் பேர் படைத்தாய். (இவ்வாறு) மேகம், நீர், மோர் என்று முப்பெரும் பெயர்களையும் பெற்றாய்.

● இப்பாடலில் நீர் காணும் சிறப்புக்களை விளக்குக.

விடை:

இரட்டையர், அதிமதுரகவி என்போர் வாழ்ந்த காலத்து புலவர்களுள் கேலியும் கிண்டலுமான நகைச்சுவை ததும்பும் பாடல்களைப் பாடுபவர் காளமேகப் புலவர்.

இடைச்சியின் கையால் தனக்குக் கிடைத்த மோரில் நீர் கலந்திருப்பதை எள்ளல் சுவையில் பாடியிருக்கும் விதம் நயத்தற்குரியது.

இடைச்சியின் மோர், மேகம், நீர், மோர் என்ற மூன்று பேற்றினை, மூன்று பெயர்கள் சூடியிருப்பதாகப் பாடியுள்ளமை நகைச்சுவையைத் ததும்பச் செய்கிறது.

மோரில் நீர் மிகைத்திருப்பதால் நீர் கலந்தவர் மீது தோன்றிய வெறுப்பைக் காளமேகப் புலவர் சுவைபடப் பாடி இருக்கும் விதம் நயத்தற்குரியது.

வசைக் கவி பாடுவதில் வல்லவர் மோரைப் போற்றி வியந்து ஆச்சிக்கு வாரத்தை சாடை செய்த விதம் சிந்தனையைத் தொடுகிறது.

"அழிவாய் சத்தம் அடங்காதோ..." எனும் பாடலை எழுதி சந்தி பிரித்துக் காட்டுக.

விடை:

▲ ஆழிவாய்ச் சத்த மடங்காதோ யான் வளர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிவாய் மண்கூறு கொண்டதோ ஊழி
திரண்டதோ கங்குல் தினகரனுந் தேரும்
உருண்டதோ பாதாளத்துள்

▲ ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ யான் வளர்த்த
கோழிவாய் மண்கூறு கொண்டதோ ஊழி
திரண்டதோ கங்குல் தினகரனும் தேரும்
உருண்டதோ பாதாளத்து உள்

● **பின்வரும் அரும்பதங்களுக்குப் பொருள் தருக.**

ஊழி, ஆழி, கங்குல்

விடை:

ஊழி	ஊழிக்காலம்
ஆழி	கடல்
கங்குல்	இரவு

● "ஆழிவாய்ச் சத்தம்..." என்று தொடரும் பாடலைப் பாடியவர் யார்?

விடை:

ஒப்பிலா மணிப்புலவர்

● இப்பாடலின் பொருளை எழுதுக. நயத்தினைப் பரிசீலிக்குக.

இக்கேள்விக்கான விடையுடன் மீண்டும் இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ்வின் தூதரே! இஸ்லாத்தில் சிறந்த நற்செயல் எது? என்று நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு நபியவர்கள், "எவருடைய நாவிலிருந்தும் கரத்திலிருந்தும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்றிருக்கிறாரோ அவரின் செயலே சிறந்தது" என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

விற்பனை முகவர் தேவை

உங்கள் அபிமான சஞ்சிகை அகரம் மாத இதழுக்கு நாடளாவிய ரீதியில் விற்பனை முகவர்கள் தேவை.

மாணாக்கருக்கு அறிவும் நல்லொழுக்கமும் கற்பிக்கும் அகரம் இதழின் விற்பனை முகவர் ஆகி ஈருலக நன்மைகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:

சகோதரர் அஷ்மல்கான்
0776 98 42 02 | 071 811 26 82

ஐந்தாம் தர புலமைப் பரிசில் சித்தி

எம்.எம். ஆஇஷா மிஹ்லார் (164)
க/ ஸ்ரீ ராமகிருஷ்ணா மத்திய கல்லூரி, கலஹா
பெற்றோர்: எம். மிஹ்லார், பாத்திமா ரஸானா



குருணாகல் நிகவெரட்டிய வெல்பொத்துவெவ மு.ம.வி பாடசாலையில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான எம்.என். நிப்ளா (157), எம்.எச்.எப். ஹஸ்லா (177), எஸ்.டீ. இஸ்ஸத் பர்வீன் (154), எம்.எம். இன்ஷாத் (165), எம்.எஸ். சப்னி (176), மற்றும் வகுப்பாசிரியை ஏ.எப். நுஸ்ரியா, பகுதித் தலைவர் அல்ஹாஜ் எம்.எல்.எம். ஹனீபா, அதிபர் எம்.எஸ்.எஸ். முஸ்தபா ஆகியோரை படத்தில் காணலாம்.

எப். சஸ்னா சஹ்ரான் (179)
க/ உடுதெனிய மு.ம.வி.
பெற்றோர்: முஹம்மத் சஹ்ரான்- சனீகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY JAFFNA

மஸ்ஹர் ஸகரிய்யா



'பய்யினாதுர் ரஸூல் வ முஃஜிஸாதுஹு' என்ற அவரின் நூல் உலகப் புகழ்பெற்றது. அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் பேசும் அறிவியல் அற்புதங்களின் கலைக்களஞ்சியம் என்று கூட அதனைக் கூறலாம். தனது கருத்துக்களினூடாக இன்றைய உலகிற்குக் பொருத்தமான மார்க்கம் இஸ்லாம் மட்டுமே என்பதை நிரூபிக்கும் அவரின் போக்கு அவருக்கே உரிய தனிப் பெரும் ஆளுமையாகும்.

அஷ்ஷெய்க் அப்துல் மஜீத் ஸிந்தானி

அல்குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் காணப் படும் அறிவியல் அற்புதங்களை முன்வைத்து இஸ்லாமிய அழைப்புப் பணியை முன்னெடுக்கும் போக்கு சமகால முஸ்லிம் உலகில் அதிகரித்து வருகிறது. பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இறக்கப்பட்ட இறை வஹியையும் உம்மி நபியின் நாவுகளிலிருந்து வெளியான வார்த்தைகளையும் ஆய்வு செய்து அவற்றில் காணப்படும் உண்மை களை ஏற்று இஸ்லாத்தை ஏற்பவர்களின் எண் ணிக்கையில் தினந்தோறும் அதிகரிப்பு ஏற்பட்டு வருகிறது. சாதாரண அழைப்பாளிகள் முதல் பெரும் பெரும் மார்க்க அறிஞர்கள் வரை அனை வரும் இன்று இஸ்லாத்தை எத்திவைக்கப் பயன் படுத்தும் முக்கிய வழிமுறையாக அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் பேசும் அறிவியல் உண்மைகள் காணப்படுகின்றன.

அல்லாஹ்வின் தூதரின் காலம் தொட்டே மார்க்கத்தை எத்திவைக்க இந்த அணுகுமுறை பயன்படுத்தப்பட்ட போதிலும் நவீன உலகிற்கு இவ் அணுகுமுறையை அறிமுகப்படுத்தி நாள் தோறும் பலர் இஸ்லாத்தை ஏற்கக் காரணமாக இருப்பவர் யெமன் நாட்டைச் சேர்ந்த பேரறிஞர் அஷ்ஷெய்க் அப்துல் மஜீத் ஸிந்தானி ஆவார்.

மிகப் பெரும் மார்க்க அறிஞராகவும் அழைப் பாளியாகவும் மட்டுமன்றி யெமனில் முன்னணி அரசியல்வாதியாகவும் இருக்கின்ற அஷ்ஷெய்க் அப்துல் மஜீத் ஸிந்தானி, 1942ம் ஆண்டு யெமன் 'அப்' மாகாணத்தில் 'லுஹ்பா' எனும் சிறிய கிராமத்தில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை தனது கிராமத்தில் கற்ற பின் உயர் கல்விக்காக ஏடன் நகர் சென்றார்.

விஞ்ஞானத் துறை மாணவனாக இருந்த அஷ்ஷெய்க் அப்துல் மஜீத் ஸிந்தானி தனது உயர் படிப்புக்காக எகிப்தின் அய்ன் ஷம்ஸ் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். விஞ்ஞானத் துறையை விட ஷரீஆத் துறையில் கற்க ஆசைப்பட்ட அவர் தனது படிப்பை இடைநடுவே விட்டுவிட்டு அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் ஷரீஆவைக் கற்கத் தொடங்கினார். அல்அஸ்ஹர் பல்கலைக் கழகத்தில் பேரறிஞர்கள் பலருடன் பழகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அதன் விளைவாக இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது.

1960களில் அவர் நாடு திரும்பியபோது யெமனை ஆட்சிசெய்து கொண்டிருந்த இமாமி யாக்களுக்கு எதிரான மக்கள் போராட்டம் ஆரம்பித்திருந்தது. ஷீஆக்களில் மிகத் தீவிர போக்குள்ள அமைப்பினரே இமாமியாக்கள் ஆவர். எனவே, அவர் இப்புரட்சியில் தன்னையும் இணைத்துக் கொண்டார். ஸன்ஆவின் தேசிய ஒளிபரப்பு நிலையமொன்றில் 'மார்க்கமும் புரட் சியும்' என்ற தலைப்பில் பல நிகழ்ச்சிகளை தொடர்ந்தேர்ச்சையாக நடத்தி மக்களின் போராட்ட உணர்வைக் கூர்மைப்படுத்தினார்.

1967ல் அப்போதைய ஆட்சியாளராக இருந்த அப்துல்லாஹ் ஸல்லாலுக்கு எதிராக 'நவம்பர்-5'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குழுப் போராட்டம் நடத்தி ஆட்சி மாற்றம் மேற்கொண்டது முதல் அவரின் அரசியல் வாழ்க் கையும் ஆரம்பித்தது எனலாம். கல்வி அமைச்சு அவருக்கு அறிவியல் மற்றும் விஞ்ஞானத்துறையை கட்டியெழுப்பும் பொறுப்பை வழங்கியது. 1970களில் உயிரியற் துறையை கற்பிக்கும் விரிவுரையாளராக பல உயர்தரப் பாடசாலைக ளில் அவர் கடமையாற்றியுள்ளார்.

1970ல் எகிப்தில் இஃவானுல் முஸ்லிமூன் அமைப்பின் அலுவலகத்தைத் திறந்தார். அவர் கல்வியமைச்சில் பிரதான பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டபோது யெமனில் வாழ்ந்த மற்றும் பல அறிஞர்களின் உதவியுடன் ஆரம்பக் கல்விக்கும் உயர் கல்விக்கும் தேவையான பாடநூல்ளை தயார் செய்தார். நவீன விஞ்ஞானத் தையும் அல்குர்ஆனின் அறிவியல் அற்புதங்களை யும் ஒப்பீட்டாய்வு செய்து 14 நூற்றாண்டுகளுக்கு முன்னர் இறக்கப்பட்ட அல்குர்ஆனின் அற்புதத் தன்மையை உலகறியச் செய்யும் வகையில் பல நூல்களை இக்காலத்தில் எழுத ஆரம்பித்தார்.

1980களில் ஆப்கானிஸ்தான் சோவியத் ரஷ் யாவின் இரும்புப் பிடிக்குள் சிக்கியிருந்தது. இவ் ஆக்கிரமிப்புக்கு எதிராக உலகெங்கும் பிரசாரம் அதிகரிக்கவே அவர் ஆப்கானுக்குச் சென்று ரஷ் யாவுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டார்.

அஷ்ஷெய்க் அப்துல் மஜீத் ஸிந்தானி அரேபிய தீபகற்பத்திற்குச் சென்றபோது அங்கும் பல விரிவுரைகளை நடத்தினார். அவரின் சஊதி விஜயத்தின் விளைவாக உலகம் பெற்ற மிகப் பெறும் பேறே அல்குர்ஆனிலும் அஸ்ஸுன்னா விலும் உள்ள அறிவியல் அற்புதங்களை ஆய்வு செய்யும் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்களைக் கொண்ட ஒரு பேரவை (Commission on Scientific Signs in the Quran and Sunnah) அமைக்கப்பட்டமை ஆகும். இவ்வமையத்திற்கு சஊதி அரசாங்கம் தனது பூரண அனுசரணையை வழங்கி வருவதன் காரணமாக இன்றும் இவ் அமைப்பு உயிர்த்து டிப்புடன் இயங்கி வருகிறது. இவ்வமைப்பு உலகிலுள்ள தலைசிறந்த இஸ்லாமிய அறிஞர்கள் பலரையும் இணைத்துக்கொண்டு அல்குர்ஆனிலும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது கூற்றுக்களிலும் உள்ள அறிவியல் அற்புதங்களை உலகறியச் செய்யும் பொறுப்பை சுமந்து கொண்டு அதனைக் கச்சிதமாக செய்து வருகிறது.

இவரின் தனிப்பட்ட முயற்சிகளினால் 1995ம் ஆண்டில் யெமனில் ஜாமிஅதுல் ஈமான் பல்க லைக்கழகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அரச ஆதரவுடன் இயங்கும் இப் பல்கலைக்கழகத்தில் வருடாந்தம் 400 உள்நாட்டு, வெளிநாட்டு மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேறுகின்றமை குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

அஷ்ஷெய்க் அப்துல் மஜீத் ஸிந்தானி அவர்கள் அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் பேசும் அறிவி யல் அற்புதங்கள், இஸ்லாமிய அழைப்புப் பணி யின் முக்கியத்துவம், அதனை நவீன காலத்தில் மேற்கொள்வதற்கான வழிமுறைகள் போன்ற தலைப்புக்களில் பல நூல்களை எழுதியுள்ளார்.

'பய்யினாதுர் ரஸூல் வ முஃஜிஸாதுஹு' என்ற அவரின் நூல் உலகப் புகழ்பெற்றது. அல்குர் ஆனும் அஸ்ஸுன்னாவும் பேசும் அறிவியல் அற் புதங்களின் கலைக்களஞ்சியம் என்று கூட அதனைக் கூறலாம். தனது கருத்துக்களினூடாக இன்றைய உலகிற்குப் பொருத்தமான மார்க்கம் இஸ்லாம் மட்டுமே என்பதை நிரூபிக்கும் அவரின் போக்கு அவருக்கே உரிய தனிப் பெரும் ஆளுமையாகும்.

இவரது நூல்கள் இன்று பல மொழிகளுக்கும் பெயர்ப்புச் செய்யப்படுகின்றன. அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் முன்வைக்கும் கருவியல் உண் மைகள் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் (கருவறையில் ஏற்படும் மாற்றங்களும் அதன் கால வரையறைகளும்) வரலாறு நெடுகிலும் இஸ்லாமிய அறிஞர்களுக்கு மத்தியில் நிலவி வந்திருக்கின்றன. இக்கருத்துக்களை விஞ்ஞான ரீதியாக அணுகி இக்கருத்து வேறுபாடுகள் முற்றுப்பெற வழி செய்தார். பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் முன்வைத்த கருவியல் உண்மைகளை அவர் நவீன விஞ்ஞானக் கருத்துக்களுடன் 'பய்யினாதுர் ரஸூல்' என்ற நூலில் மிகத் தெளிவாக விளக்குகிறார்.

அஷ்ஷெய்க் அப்துல் மஜீத் ஸிந்தானியின் இத்தகைய அறிவியற் பங்களிப்புகளுக்கு மத்தியில் அரசியற் பங்களிப்பும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு விடயமாகும். யெமனிய சீர்திருத் தக் கூட்டமைப்பின் தலைவராக அவர் இருந்து வருகிறார். யெமனில் அலி அப்துல்லாஹ் ஸாலி ஹின் கொடுங்கோல் ஆட்சிக்கெதிராக நடை பெற்ற போராட்டங்களில் இக்கட்சியின் பங்கு அளவிட முடியாதது. இப்போராட்டத்தை நெறிப்படுத்தும் பெரும் பொறுப்பை இக்கட்சி உறுப்பினர்கள் ஏற்றிருந்தனர். 2011ல் உலக சமாதானத்திற்காக நோபல் பரிசு பெற்ற முதலாவது அரபு முஸ்லிம் பெண்மணி தவக்குல் கர்மான் இக்கட்சியின் பிரதான அங்கத்த வர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10,11 தர மாணவர்களுக்கானது

விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப் (விஷேட பயிற்சி ஆசிரியர்- விஞ்ஞானம்)

அங்கிகளின் பிரதான உயிர்ச் செயன்முறைகள்

ஒளித்தொகுப்பு (Photosynthesis)

பச்சைத் தாவரத்திலுள்ள பச்சையத்தினால் உறிஞ்சப்படும் சூரிய ஒளிச் சக்தி மூலம் காபனீரொட்சைட்டு, நீர் ஆகியவற்றைப் பயன்படுத்தி குளுக்கோசை உருவாக்கும் செயற்பாடு ஒளித்தொகுப்பு எனப்படும்.

- **சொற்சமன்பாடு:**

காபனீரொட்சைட்டு + நீர் —(சூரிய ஒளி / பச்சையம்)→ குளுக்கோசு + ஒட்சிசன் வாயு

- **இரசாயனச் சமன்பாடு:**

$$6CO_2+6H_2O \xrightarrow[\text{பச்சையம்}]{\text{சூரிய ஒளி}} C_6H_{12}O_6+6O_2$$



- **ஒளித்தொகுப்பின் முக்கியத்துவங்கள் எவை?**

1. சகல பிறபோசணிகளுக்கும் தேவையான உணவை உற்பத்தி செய்கின்றது.
2. காபனீரொட்சைட்டு வாயுவை உறிஞ்சி வளிக்கு ஒட்சிசன் வாயுவை வழங்குவதன் மூலம் வளியின் சமநிலை மாறாது பேணுகின்றது.
3. தாழ்த்தும் வளிமண்டலமாகக் காணப்பட்ட புவியின் வளிமண்டலம் ஒட்சியேற்றும் வளிமண்டலமாக மாறியது.
4. ஓசோன் படை உருவாகி தீங்கு பயக்கும் கதிர்கள் புவியை அடைதல் தடுக்கப்படுகிறது.

தாவர இலைகளில் மாப்பொருள் இருப்பதைக் கண்டறியும் பரிசோதனையின் படிமுறைகள், செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகளுக்கான காரணங்களை இடைவெளியில் எழுதுக.

i. தாவர இலையை நீரில் நன்கு அவித்தல்: ....

ii. நீரில் அவித்த இலையை அற்ககோலில் இட்டு சூடாக்குதல்: ....

iii. வெளிறிய இலையை நீரினால் கழுவுதல்: ....

iv. அயடீன் கரைசல் துளிகளை இலை மீது சேர்த்தல்: ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாவரங்களில் பதார்த்தங்களை கொண்டுசெல்லல்

உயிர்ப்பற்ற கொண்டு செல்லல் (அனுசேப சக்தி பயன்படாது)	பரவல்	துணிக்கைகள் அவற்றின் செறிவு கூடிய இடத்திலிருந்து செறிவு குறைந்த இடத்துக்குச் செல்லுதல்.	உ- ம். ஆவியுயிர்ப்பு
	பிரசாரணம்	பங்கூடு புகவிடும் மென்சவ்வொன்றினூடாக நீர் மூலக் கூறுகள் அவற்றின் செறிவு கூடிய இடத்திலிருந்து அவற் றின் செறிவு குறைந்த இடத்திற்குச் செல்லுதல்.	உ- ம். மண்ணிலிருந்து வேர் மயிர்க்கலத்தினுள் நீர் செல்லல்.
	ஆவியாதல்	சூழல் வெப்பநிலையிலுள்ள நீரின் துணிக்கைகள் திரவ நிலையிலிருந்து வாயு நிலைக்கு மாறுதல்.	உ- ம். ஆவியுயிர்ப்பு.
உயிர்ப்பான கொண்டு செல்லல் (அனுசேப சக்தி தேவை)	திணிவுப் பாய்ச்சல்	புவியீர்ப்பின் கீழ் அல்லது அமுக்க வேறுபாடு காரணமாக கரைப்பான், கரையக் கூறுகள் ஒன்றாக அசைதல்.	உ- ம். காழினூடாக நீர், கனியுப்பு கடத்தப்படல். உரியத்தினூடாக உணவு செல்லுதல்.
	உயிர்ப்பான அகத்துறிஞ்சல்	தாவரங்களில் பரவல் செயன்முறைக்கு எதிராக முதலுரு மென்சவ்வினூடாக துணிக்கைகள் செல்லுதல்.	உ- ம். தாவரங்களில் கனியுப்புக்கள் அகத்து றிஞ்சப்படல்.

- **சாற்றேற்றம்**

தாவரங்களில் நீரும் நீரில் கரைந்துள்ள கனியுப்புக்களும் காழ்க்கலனினூடாக மேல்நோக்கிக் கொண்டு செல்லப்படல் சாற்றேற்றம் எனப்படும்.

சாற்றேற்றம் நிகழ்வில் பங்கு கொள்ளும் காரணிகளைக் குறிப்பிடுக.

- **ஆவியுயிர்ப்பு**

தாவரங்களின் காற்றுக்குரிய மேற்பரப்புக்களிலிருந்து நீரானது ஆவி நிலையில் வெளியேறும் செயன்முறை ஆவியுயிர்ப்பு எனப்படும்.

ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்காகத் தாவரங்கள் கொண்டிருக்கும் இசைவாக்கங்களும் அவற்றிற்கான தாவரத் தொகுதிகளும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. குறித்த இசைவாக்கத்திற்கு பொருந்தும் தாவரத் தொகுதியின் சரியான எழுத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

இசைவாக்கம்	பொருத்தமான தாவரத் தொகுதியின் எழுத்து	தாவரத் தொகுதிகள்
1. இலைகள் முட்களாகத் திரிபடைந்திருத்தல்	....	a. நாகதாளி, கள்ளி
2. வரட்சிக் காலத்தில் இலைகள் உதிர்தல்	....	b. தேமா, ஆல், கடல்மாங்காய்
3. குழிகளில் அமிழ்ந்த இலைவாய் காணப்படல்	....	C. இறப்பர், அரசு, தேக்கு
4. இலைகள் ஒடுக்கப்பட்டுக் காணப்படல்	....	C. நாகதாளி, சாத்தாவாரி
5. இலை மேற்பரப்பு பளபளப்பாக இருத்தல்	....	C. அலரி, இராவணன் மீசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி உறைதல்

- காயங்கள் ஏற்பட்டு குருதி தொடர்ந்து வெளியேறாது தடுப்பதற்கும் நுண்ணங்கிகள் குருதியை அடைவதை தடுப்பதற்கும் என நடைபெறும் செயற்பாடு குருதி உறைதல் எனப்படும்.
- இது நடைபெற 3 நிமிடங்கள் வரை எடுக்கும்.
- இது சிக்கலான பல தாக்கங்களைக் கொண்டது.



- குருதி உறைதலுக்கு அவசியமான பின்வரும் காரணிகளை எழுதுக.

i. அவசியமான விற்றமின்: ....

ii. அவசியமான கனியுப்பு: ....

iii. சிறுதட்டினுள் காணப்படும் கூறு: ....

iv. குருதித் திரவவிழையத்தில் காணப்படும் கூறுகள்: ....

குருதி குறுக்குப் பாய்ச்சல்

- ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் குருதியை இன்னொருவருக்குச் செலுத்துவது குருதிக் குறுக்குப் பாய்ச்சல் ஆகும். இது குருதியினங்கள் பொருந்தும் விதமாகவே இடம்பெற வேண்டும்.

பொருத்தமான குருதிப் பாய்ச்சல் முறை பின்வருமாறு அமையும்:





- குருதி குறுக்குப் பாய்ச்சல் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. சர்வ வழங்கி குருதி இனம்: ....

ii. சர்வ வாங்கி குருதியினம்: ....

iii. B^- குருதியை ஒருவர் எவ்வகை குருதியுடையவர்களிடமிருந்து பெறமுடியும்? ....

நிர்ப்பீடனம்

- உடலினுள் புகும் நோய்க் காரணிகளை அழிக்கும் அல்லது அவற்றின் பெருக்கத்தைத் தடுக்கும் ஆற்றல் நிர்ப்பீடனம் எனப்படும்.

பின்வரும் நிர்ப்பீடன வகைகளுக்கான உதாரணங்களை அல்லது சந்தர்ப்பங்களை எழுதுக.

i. இயற்கையாகப் பெற்ற உயிர்ப்பான நிர்ப்பீடனம்: ....

ii. இயற்கையாகப் பெற்ற மந்தமான நிர்ப்பீடனம்: ....

iii. செயற்கையாகப் பெற்ற உயிர்ப்பான நிர்ப்பீடனம்: ....

iv. செயற்கையாகப் பெற்ற மந்தமான நிர்ப்பீடனம்: ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாலும் உடல் உழைப்பாலும் இஸ்லாத்திற்காக தியாகங்கள் பல செய்து அண்ணலாரின் உள்ளத்தில் நீங்காத இடம் பிடித்தவரே அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு) அன்ஹா ஆவார்.

- அவர்களின் தாய் உம்மு ரூமான் (ரழியல்லாஹு அன்ஹா) ஆவார்.
- அவர்களின் தந்தை அபூ பக்ர் (ரழியல் லாஹு அன்ஹு) ஆவார்.
- ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு இரண்டு சகோதரர்கள், இரண்டு சகோதரிகள்.
- கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்குப் பிறகு நபியவர்கள் இவர்களைத் திருமணம் முடித்தார்கள்.
- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் இறுதி நாட்கள் ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டிலேயே கழித்தன. அவர்களின் மடியிலேயே அண்ணலார் மரணித்தார்கள்.
- அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் தமது 18ம் வயதில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை இழந்தார்கள்.

அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா)

- "நான் ஆஇஷாவின் முன் கையின் வெண்மையை சுவர்க்கத்தில் பார்த்தேன்" என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)
- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.
- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காலத்துக்குப் பின் நபித் தோழர்கள் மத்தியில் தோன்றிய கருத்து வேறுபாடுகள் அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் மூலம் தீர்க்கப்பட்டுள்ளன.
- ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் தமது அறுபத்தி ஏழாம் வயதில் ஹிஜ்ரி 58, ரமழான் 17, செவ்வாய்க்கிழமையன்று மரணித்தார்கள்.
- அன்னாருக்கு அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஜனாஸா தொழுகை நடத்தினார்கள்.

வயதில் சிறியவராக இருந்தாலும் மார்க்க விஷயங்களில் மாபெரும் மேதையாகத் திகழ்ந்த ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) போன்றவர்களை வரலாற்றில் காண்பது அரிது.

முஸ்லிம் பெண்கள் ஒவ்வொருவரும் அன்னையாரின் இந்த வரலாற்றில் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

எம்.எப்.எப். பஸ்மினா
தரம் - 09
வெலம்பொட மு.ம.வி, வெலம்பொட

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சாரம்

இனிதாய் அமைந்திட வேண்டும்

இனிய திருமறை
இசைத்திட வேண்டும்
இல்லங்கள் ஜொலித்திட வேண்டும்
இன்பம் சூழ்ந்திட வேண்டும்

ஸதகா, ஸகாத்தை
சலிப்பின்றிக் கொடுத்திட வேண்டும்
வறுமைகள் அகன்றிட வேண்டும்
வசந்தம் எங்கும் பொங்கிட வேண்டும்

வேதனைகள், சோதனைகள்
ஒழிந்திட வேண்டும்
சாதனைகள் பல
படைத்திட வேண்டும்

சிந்தையில் பல மாற்றங்கள்
வந்திட வேண்டும்
சிரிப்புடன் வாழ்வும்
அமைந்திட வேண்டும்

அன்பு நபி வழிமுறையை
அழகாகப் பின்பற்றி
அடியொட்டி வாழ்ந்திட வேண்டும்
எம் ஈருலக வாழ்வும்
இனிதாய் அமைந்திட வேண்டும்

றஸ்னா றஸீன்
முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி
கன்எலிய

சுமை

சிந்திக்காத வரை
மூளைக்குச் சுமை
பயன்படாத வரை
பணப் பெட்டிக்குச் சுமை
துணிவு இல்லாத வரை
வெற்றிக்குச் சுமை
உழைக்காத வரை
மனிதா! நீ உலகத்திற்குச் சுமை

ஏ.என்.எப். நுஹா, தரம்- 11
கெகுணகொல்ல தேசிய பாடசாலை
கெகுணகொல்ல

நான் பெற்ற நன்மைகள்

அன்னையிடமிருந்து
அன்பைப் பெற்றேன்
ஆசானிடமிருந்து
அறிவைப் பெற்றேன்

அல்லாஹ்விடமிருந்து
அகிலத்தில் வாழ்வைப் பெற்றேன்
அகரத்திடமிருந்து
நல்லறிவைப் பெற்றேன்

எம்.எப்.எம். மபாஹிரா
கி/ கிண்ணியா மு.ம.க

அகரமே நீ வாழ்க

முடியவிழில்லை என்னும்
முட்களுக்குள் சிக்கியிருந்த
முன்னைய பொழுதுகளை
மூடிவிட்டு
முடியும் என்ற முடிவுடன்
முன்னேறுவதற்கு
மாணவர் எமக்கு
வழிகாட்டும் அகரமே
நீ வாழ்க!

எச்.எம். பாத்திமா
அல்ஹிலால்புரம், தம்பாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் I — நேரம் 45 நிமிடம்

உதாரணத்தை அவதானித்து 1-5 வரை உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(உ+ம்) பூ பூனை பூட்டு பூங்கா

1. மா மாசி மாணவி …………
2. ஆ ஆலை ஆப்பு …………
3. வா …….. வாத்து வாசிப்பு
4. …….. கோடி கோபம் கோபுரம்
5. நா நாடு ………… நாவலர்

பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான சொற்களை இனங்கண்டு அதன் கீழ் கோடிடுக.

6. பூனை, யானை, மீன்

7. புலி, கிளி, கொக்கு

8. கழுத்து, காது, மூக்கு

9. முச்சக்கர வண்டி, நீர்மூழ்கிக் கப்பல், உழவு இயந்திரம்

10. சுவாசம், நரம்பு, தோல்

11. பின்வரும் பிராணிகளின் கால்களின் எண்ணிக்கையில் கூடுதலாக அமையும் கூட்டம் எது?
    i. ஆடுகள் 7 + கிளிகள் 3 + மயில்கள் 6
    ii. குதிரைகள் 4 + முயல்கள் 5 + மாடுகள் 3
    iii. குயில்கள் 10 + கோழிகள் 10 + கிளிகள் 4

12. மின்கலம், ஆணி, கொயில் கம்பி என்பவற்றைப் பயன்படுத்தி உருவாக்கும் உபகரணம்.
    i. மின்காந்தம் ii. மின்குமிழ் iii. டைனமோ

சரி, பிழை எனக் குறிப்பிடுக.

13. மரக்குற்றியொன்றை நீரில் இழுத்துச் செல்வதை விட தரையில் இழுத்துச் செல்வது இலகுவாகும். ( )
14. திசையறி கருவியில் காணப்படும் காந்தம் ஊசிக் காந்தம். ( )
15. பிடித்த மீன்களை வைக்கும் கூடை பறியா கும். ( )
16. தவளை ஊர்ந்து செல்வதன் மூலம் இடம் பெயரும் பிராணியாகும். ( )
17. மாடுகளைக் கட்டும் இடத்தைத் தொழுவம் என அழைப்பர். ( )
18. வீடுகளில் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய மின் சாதனம் எது?
    i. குளிர்சாதனப் பெட்டி ii. சலவை இயந்திரம்
    iii. அமிழ்ப்பு வெப்பமானி

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.
அருகிலுள்ள உருவில் அடுத்து வரும் கோலத்தை தெரிவு செய்க.

19. 



i. ii. iii.

20. □○△ △□○ ○△□ ?

□○△ △○□ ○□△

i. ii. iii.



21. இப்படத்தில் எத்தனை சதுரக் கட்டங்கள் நிழற்றப்பட்டுள்ளன?
    i. 8 ii. 10 iii. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

22. இரண்டாம்வகை நெம்புகோலுக்கு உதாரணம்.

i. சில்லு வண்டி ii. கத்தரி iii. மூடி திறப்பான்

23. சாய்தளங்களைப் பயன்படுத்தி வேலைகளை இலகுவாக்குதலுக்கு உதாரணம்.

i. கோடரி முனையால் மரங்களைப் பிளத்தல்
ii. மாட்டு வண்டியில் பொருட்கள் கொண்டு செல்லல்
iii. மோட்டார் சைக்கிள் செலுத்துதல்

பின்வரும் பூச்சி இனங்களின் பெயரை எழுதுக.

(நுளம்பு, மூட்டைப் பூச்சி, கும்பிடு பூச்சி, அழுங்குப் பூச்சி, வெட்டுக்கிளி)

24.


25.


26.


27. பின்வரும் பறவைகளுள் சோடியாகத் தெரியும் பறவைகள் யாவை?
i. காகம், மைனா
ii. மரங்கொத்தி, மீன்கொத்தி
iii. பருந்து, புறா

28. பண்டிகைக் காலங்களில் அதிகளவில் ஏற்படக்கூடிய விபத்து யாது?
i. வாகன விபத்து ii. பட்டாசு வெடித்தல்
iii. மின்சார விபத்து

29. கரும்பலகையில் எழுதப் பயன்படுத்தும் வெண்கட்டி செய்யப் பயன்படுத்தும் பிரதான மூலப் பொருள்களில் ஒன்று.
i. சீமெந்து ii. சிப்பி iii. களி

30. மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் உபாயம் அல்லாதது எது?

i. சூரியபடல் ii. உலர்மின்கலம் iii. மின்ஆளி

31. காந்தமொன்றினால் கவரப்படாத பொருள் எது?
i. பித்தளை ஆணி ii. இரும்பு ஆணி
iii. குண்டூசி

பின்வரும் உபகரணங்களின் பெயர்களை எழுதுக.

(பட்டறைக்கல், திருகைக்கல், ஆட்டுக்கல், அம்மியும் குளவியும்)

32.

33.


34.


சாக்கடையில் பிறப்பேன்
சாவு மணி அடிப்பேன்
சண்டாளன் நான்தான்
சமாதியாவாய் நீதான்

35. இப்பாடல் குறிப்பது
i. எலியை ii. நுளம்பை iii. புழுவை

36. பாடலில் இடம்பெற்ற முன்னிலை
i. நீ ii. நான் iii. மணி

37. இப் பாடலோடு தொடர்புபட்ட நோய் எனக் கருதக்கூடியது.
i. டெங்கு ii. மலேரியா iii. மாலைக்கண்

38. பாடலில் இடம்பெற்ற இடப்பெயர்
i. மணி ii. சண்டாளன் iii. சாக்கடை

39. பாடலில் இடம்பெறாத எதிர்காலச் சொல்.
i. ஓடுவேன் ii. அடிப்பேன் iii. பிறந்தேன்

40. சாவு என்பதன் ஒத்த பதம்
i. சாதம் ii. பிறப்பு iii. இறப்பு

மூன்று கட்டங்களிலும் நடுவில் வரக்கூடிய ஒரே எழுத்தைத் தெரிந்து கோடிடுக.

41.

	ம	
கு		தி
	தி	

	ப	
த		தி
	து	

	ச	
சா		து
	து	

i. ட் ii. ப் iii. ந்

42.

வெ		ப
டு		டு

கு		மெ
டு		டி

சொ		வி
டை		டு

i. ட் ii. க் iii. ப்

வாக்கியங்களை அவதானித்து மிகப் பொருத்தமான விடையைத் தருக.

43. சங்கரன் ஒரு குயவன். அவன் ...... செய்வான்

44. வசீகரன் ஒரு செம்படவன். அவன் .... பிடிப்பான்

45. விமலாவதி ஓர் .... அவள் பாடம் கற்பிப்பாள்.

46. ஜெயலத் ஒரு .... அவன் கப்பல் ஒட்டுவான்.

47. முகலன் ஒரு கபோதி. அவனுக்கு .... இல்லை.

இரு பொருள் தரக்கூடிய சொற்களைக் கோடிடுக.

48. மதி, சூரியன், வீடு

49. மரம், ஒளி, கிணறு

50. ஆறு, புத்தகம், பென்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் II

நேரம் 1 மணி 15 நிமிடம்

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

விஜயா தனியார் மருத்துவமனையில் வேலை பார்க்கும் ஒரு தாதி. இவள் சமூகநலப் பணிகளில் மிக ஆர்வமாக ஈடுபடுவாள். மாலதி இவளுக்கு இளையவள். இவள் ஒரு சட்டத்தரணி. ஆனால் இவள் தன்னலமே பெரிது என வாழ்பவள். பாஸ்கரன் எல்லோரையும் விட மூத்தவன். இவன் ஒரு நாவிதன். இவனது உழைப்பால்தான் ஏனைய இருவரும் படித்து பட்டம் பெற்றனர் என்பது உண்மை. விஜயா நன்றி மறப்பது நன்றன்று என்ற திருக்குறளுக்கு ஏற்றவாறு பாஸ்கரனுடன் நடந்து கொள்வாள். ஆனால் மாலதி பாஸ்கரனை மதிப்பதே கிடையாது.

(1) இப்பந்தியில் குறிப்பிடப்பட்ட குடும்ப அங்கத்தவர்கள்.

i. 6 பேர் ii. 3 பேர் iii. 2 பேர்

(2) இக்குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை.

i. விஜயா ii. மாலதி iii. பாஸ்கரன்

(3) நாவிதன் என்பவர்

i. படம் வரைபவன் ii. மேளம் வாசிப்பவன்
iii. முடி திருத்துபவன்

(4) மாலதியைக் குறிக்கும் ஒரு சொல்.

i. பொதுநலவாதி ii. சுயநலவாதி
iii. பிரதிவாதி

(5) நன்றி மறப்பது நன்றன்று எனக் கூறியவர்.

i. பாஸ்கரன் ii. வள்ளுவர் iii. ஔவையார்

(6) சட்டத்தரணி என்பது

i. பொதுப்பால் ii. ஒன்றன்பால்
iii. பெண்பால்

(7) பாஸ்கரனுக்கு உவமானமாக குறிப்பிடக் கூடியது.

i. ஏணிப் படியைப் போல
ii. கடலைப் போல iii. நட்சத்திரம் போல

'பட்டம்' என்ற சொல்லைப் போன்று ஒரே ஓசைச் சொற்கள் 3 தருக?

(8) ....

(9) ....

(10) ....

பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான தமிழ்க் கருத்தை எழுதுக.

(11) தாத்தா அர பலன்ன ....

(12) அம்மா உயனவா ....

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

(13) வீட்டிலுள்ள தேங்காய் துருவியின் பற்களை கூர்மையாக்க உதவும் உபகரணம்.

i. அரம் ii. எண்ணெய்க்கல் iii. பிடி கருவி

(14) பின்வருவனவற்றில் புரதம்மிக்க உணவு எது?

i. பசளி ii. பருப்பு iii. வற்றாளை

(15) கறி சமைக்கும்போது பழப்புளி சேர்ப்பதற்கு பொருத்தமான சந்தர்ப்பம் எது?

i. அடுப்பில் இருக்கும்போது
ii. அடுப்பில் இருந்து இறக்கியவுடன்
iii. கறி நன்றாக ஆறிய பின்

(16) உடலின் பாதுகாப்புக்கு உதவும் உணவு வகைகளைக் கொண்ட கூட்டம் எது?

i. பழங்கள், கீரை வகைகள், காய்கறிகள்

ii. பழங்கள், சோறு, கிழங்கு

iii. மீன், பால், சோயா

பின்வரும் பந்தியை ஒழுங்கமைக்க வரும் மூன்றாவது வசனத்தின் சதுரத்தில் அதன் இலக்கத்தை எழுதுக. (3 என எழுதுக)

(17) அப்பொழுது எங்கிருந்தோ வந்த வான் ஒன்று சிறுவன் ஒருவனின் மேல் மோதியது

(18) மாடியில் நின்ற பிரபா வீதிக்கு ஓடினாள்.

(19) பிரபா தனது வீட்டு மாடியில் நின்று பாதையில் செல்லும் வாகனங்களைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(20) பொதுமக்களில் சிலர் சிறுவனை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல ஒரு சிலர் சாரதியைப் பிடித்துக் கொண்டனர்.

(21) அம்மா என்ற சத்தத்துடன் சிறுவன் பாதையின் ஓரத்தில் விழுந்தான்.

(22) பின்வரும் எண்களில் மிகப் பெரிய எண் எது?

i. 4040 ii. 4400 iii. 4404

(23) 2, 5, 10 ஆகியவற்றால் பிரிபடக்கூடிய மிகப் பெரிய எண் எது?

i. 305 ii. 360 iii. 640

(24) 500 மில்லி மீற்றர் எத்தனை சென்றி மீற்றர்?

i. 5 சென்றி மீற்றர்
ii. 100 சென்றி மீற்றர் iii. 50 சென்றி மீற்றர்

(25) $1\frac{1}{2}$ மணித்தியாலத்தில் எத்தனை நிமிடங்கள் உண்டு?

i. 90 நிமிடங்கள் ii. 75 நிமிடங்கள்
iii. 60 நிமிடங்கள்

(26) இரண்டாயிரத்து எண்பத்து ஐந்து என்பதற்கு அடுத்தாக வரும் எண் யாது?

i. 2886 ii. 2086 iii. 2806

(27) எண் கோலத்தை அவதானித்து விடை தருக.

18		24
	36	
21		30

20		30
	40	
25		35

14		28
	?	
35		21

i. 45 ii. 42 iii. 85

(28) பௌத்தர்களும் இந்துக்களும் கொண்டாடும் பண்டிகை எது?
i. சித்தரை புதுவருடப் பிறப்பு
ii. நோன்மதி தினம்
iii. பெரிய வெள்ளிக்கிழமை

(29) கடல் நீரிலிருந்து பெற்றுக் கொள்ளும் சுவையூட்டி எது?

i. கறியுப்பு ii. சக்கரை iii. சீனி

(30) தாவரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் உணவு வகை எது?

i. ஜேம் ii. பட்டர் iii. முட்டை

(31) எழுத வாசிக்கத் தெரியாத மக்களும் தகவல்களைப் பெற மிகப் பொருத்தமான பொதுசனத் தொடர்பு சாதனம்.

i. பத்திரிகை ii. வானொலி iii. கணினி

(32) இலங்கை மக்கள் அடிக்கடி சந்திக்கும் இயற்கை அனர்த்தம் எது?

i. எரிமலை ii. மின்னல் தாக்குதல்
iii. சுனாமி

(33) பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது?

i.வில்பத்து ii. தெஹிவளை iii. குமண

(34) காலி துறைமுகம் எந்த மாகாணத்தில் காணப்படுகிறது?

i. மேல் மாகாணம் ii. தென் மாகாணம்
iii. வட மாகாணம்

(35) பெரிய பாறாங்கல்லைப் புரட்டுவதற்கு பயன்படுத்தும் உபகரணம்.

i. மண்வெட்டி ii. நெம்புகோல் iii. கோடரி

பின்வரும் உருக்களுக்கான ஒலி மரபுகளை எழுதுக.

(36)


(37)


(38)

(39)


பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் குறிப்பிடுக.

(40) நீ, உன், உனது என்பன முன்னிலைச் சொற்களாகும். ( )

(41) முள் என்பதற்கு முற்கள் என்பது பன்மையாகும். ( )

(42) இறை, கடவுள், பரன் என்பன ஒத்தகருத்தாகும். ( )

(43) மலிவு என்பதற்கு ஒறுப்பு எதிர்ப்பதமாகும். ( )

(44) முக்கனிகளுள் மா ஒன்றாகும். ( )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

(45) தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் ஆகியோர் சமயத்தலமாகக் கருதும் பொதுவான இடம்.

i. சிவனொளிபாத மலை
ii. பேதுருதாலகால மலை
iii. கதிர்காமம் கோயில்

(46) தமிழர்களின் கலாசார நடனம் எது?

i. பரத நாட்டியம் ii. கண்டிய நடனம்
iii. கண்டி பெரஹர நடனம்

(47) பாடசாலை வைபவங்கள் அனைத்திலும் முதன் முதலில் ஏற்றப்படும் கொடி.

i. பாடசாலைக் கொடி ii. தேசியக் கொடி
iii. மாகாணக் கொடி

(48) ஒரு நாட்டின் தேசிய ஒற்றுமை, நாட்டின் கௌரவம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பவை.

i. தேசிய கீதம் ii. பாடசாலை கீதம்
iii. கிராமியப் பாடல்



(49) படத்தில் உள்ளவாறு கட்டங்களை நிலத்தில் வரைந்து விளையாடும் விளையாட்டு எது?

i. கிளித்தட்டு
ii. சில்லுக் கோடு
iii. கபடி



(50) கிராமப் புறங்களில் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டுக் களில் இதுவும் ஒன்றாகும்.

i. சில்லுக்கோடு
ii. கிட்அடியடித்தல்
iii. பாண்டியாட்டம்

(51) அரசாங்கத்தின் எந்தவொரு ஆவணத்திலும் காணப்படுவது.

i. பௌத்த கொடி ii. தேசியக் கொடி
iii. அரசாங்க இலட்சினை

(52) உயரமான கட்டடங்களில் வேலை செய்வோர் அணிந்திருக்க வேண்டிய பாதுகாப்பு உபகரணம் எது?

i. சப்பாத்து ii. பாதுகாப்புக் கண்ணாடி
iii. தலைக்கவசம்

(53) தெருக்களிலுள்ள மின் கம்பங்களில் ஏறும் மின்சார ஊழியர்கள் பாதுகாப்புக்காக அணிந்து இருப்பது எது?

i. சப்பாத்து ii. கையுறை iii. தலைக்கவசம்

(54) உலோகப் பாத்திரங்களில் இட்டு வைக்கக் கூடாதது.

i. கறியுப்பு ii. சீனி iii. மிளகாய்த்தூள்

பின்வரும் ஆங்கில சொற்களுக்கு கருத்தை எழுதுக.

(55) Sixteen .... (56) Nine ....

வசனங்களை ஒழுங்கமைக்குக

(57) குளங்கள்-கவனம்-அரசர்கள்- செலுத்தினர் -அக்கால-கட்டுவதில்

(58) கூடு-பறவைகள்-திரும்பும்-மாலையில்

எனது மாமனார் வாங்கித் தந்த துவிச்சக்கர வண்டி என்ற தலையங்கத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

(59) ....
(60) ....
(61) ....

கப்பல் கட்டிய... (3ஆம் பக்க தொடர்)

"நான் அல்லாஹ்விடமிருந்து நேர்மையான, உண்மையான அத்தாட்சிகளோடும் அவனது அருளையும் கருணையையும் பெற்றவனாக வந்து உங்களை அழைக்கின்றபோது நீங்கள் உங்களது இலக்கிலும் உங்களது தீர்க்கமான விடயத்திலும் குழம்பி குருடர்களாகி விட்டீர்கள். அப்படி இருக்கும்போது உங்களைப் பாதுகாத்து உங்களது எதிர்நடவடிக்கைக்கு எதிராக அதிகாரம் செலுத்தக்கூடிய சக்தியுடைவனாக நான் இருக்க முடியுமா?"

அதற்கு அவர்கள் பதிலளித்தனர்.

"நூஹே! நீர் எங்களுக்கு நேர்வழி கிட்ட வேண்டும் என்று விரும்பினால் உம்மோடு இருக்கும் இழிவானவர்களை தூரமாக்கிவிடும். நாம் அவர்களது சுவடுகளைப் பின்பற்ற முடியாது. எஜமானர்களும் தொழிலாளர்களும் எப்படி சமமாக முடியும்?"

(தொடரும், இன்ஷா அல்லாஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றம்:

பின்னடைவு என்ற பிரிகோட்டிலிருந்து...

"ஒரு முஃமினின் இரண்டு நாட்கள் ஒரே மாதிரியாக இருக்காது."

நாம் இன்றிருப்பது போல் எப்போதும் இருப்பதில்லை. மாற்றங்கள், வளர்ச்சி, விருத்தி மட்டுமன்றி தோல்விகள், இழப்புகள், பின்னடைவுகள் என்பன ஏற்படவே செய்கின்றன. நாம் விரும்பியோ விரும்பாமலோ அவை நிகழ்கின்றன. ஆனால் நாம் எமது பொது வாழ்க்கையிலும் குறிப்பாக கல்வி வாழ்க்கையிலும் முன்னேற்றம் காண வேண்டுமென்றால் அதற்கு நிறைய அர்ப்பணம், தியாகம் தேவை. பெரும்பாலானவர்கள் தமது வாழ்வில் முன்னேற்றம் என்பதைக் கண்டுகொள்வதே இல்லை. முன்னேற்றத்திற்குப் பல்வேறு மூலதனங்கள் இருக்கின்றன. அவற்றைப் பொருட்படுத்துவதும் இல்லை. சிலபோது முன்னேற்றத்திற்காக முயன்றுவிட்டு தொடர் தோல்விச் சங்கிலியால் துவண்டு விடுபவர்களே அதிகம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு முஃமினின் இரண்டு நாட்கள் ஒரே மாதிரியாக இருக்காது."

வாழ்வில் ஒவ்வொரு நாளும் முன்னேற வேண்டும். நீங்கள் முன்னேறாவிட்டால் பிறர் உங்களை முந்திச் சென்றுவிடுவர். முன்னேற்றப் பாதையில் பயணிக்கும் நாம் தொடர்ந்து முன்னேறுவதையும் அல்லது பின்னடைவதையும் தீர்மானிக்கும் ஒரு பிரிகோடு இருக்கிறது. அந்த சிறிய புள்ளியில் நாம் சரியாக செயற்படத் தவறிவிட்டால் எம்மால் ஓர் அங்குலமும் நகர முடியாது. மட்டுமல்ல, வாழ்வில் அதற்குப் பின் அந்த விடயத்தில் முன்னேறவும் முடியாது.

தாரிக் பின் ஸியாத், ஸ்பெய்னில் காலடி எடுத்து வைத்ததும் ஜிப்ரோல்டர் நதிக்கரை தாண்டி வந்த தமது கப்பல்களை எரித்து விட்டார். தாம் முன்னேறுவோம் என்ற தளராத நம்பிக்கை இருந்தது அவருக்கு. படிப்படியாக முன்னேறினார். நாட்டின் பெரும் பகுதிகளை குறுகிய காலத்தில் வெறும் 7000 படைவீரர்களைக் கொண்டு வென்றெடுத்தார். இவ்வளவுக்கும் அவர் 17 வயது வாலிபர்.

ஸ்டீவ் ஜொப்ஸ், உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி தவித்தார். பயங்கர வறுமை. இனிமேல் வாழ்க்கையில் என்னால் எதுவும் செய்ய முடியாது என்று எண்ணவில்லை. அதன் பின்னர் சிறு சிறு முயற்சிகளில் இறங்கினார். அவை பலனளிக்க ஆரம்பித்தன. அப்பிளை நிறுவினார். அதிலிருந்து நீக்கப்பட்டார். மீண்டும் இணைந்து முன்னேற்றினார். 'உலகை மாற்றிய 03 அப்பிள்கள்' என சாதனை படைத்தார்.

பின்னடைவைப் பிரித்துவிடும் கோடு

முன்னேறுவதற்கும் பின்னடைவுக்கும் இடைப்பட்ட பிரிகோட்டை நான் உங்களுக்கு சரியாக அடையாளப்படுத்த முனைகின்றேன். முன்னேற்றத்தின் பின்னர் வெற்றிகளும் வாழ்த்துக்களும் வரவேற்கும். ஆனால் இந்த முன்னேற்றத்திற்கு முந்திய ஒரு நிலைமை இருக்கிறது. அந்த இடத்தில் தவறான தீர்மானமும் பிழையான செயற்பாடும் இருந்தால் வாழ்வில் முன்னேற முடியாது.

தாரிக் பின் ஸியாத், அந்தத் தருணத்தில் பின்னடைவு என்ற வார்த்தைக்கே இனி இடமில்லை என்றும் முன்னேற்றம்தான் என தீர்மானமெடுத்து முயன்றது வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

நீங்கள் "என்னால் முடியாது" என்று நினைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஞாபகிக்க வேண்டியது இதுதான். இந்த இடத்தில் நான் மேற்கொள்ளும் தீர்மானமும் திட்டவட்டமான செயற்பாடும் தான் எனது வாழ்வில் முன்னேற்றத்தையும் பின்னடைவையும் தீர்மானிக்கப் போகின்றன.

இது வாழ்வில் எப்போதாவது ஒரு முறை அல்ல, எப்போதும் வரலாம். பல தடவைகள் வரலாம். நாம் எமது முன்னேற்றத்திற்கு மீண்டும் மீண்டும் மூலதனமிட வேண்டி வரலாம்■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக நீர் தினம் - மார்ச் 22

நீர் அருமையான வளம். பூமியைக் குளிர்மையாக உயிர் வாழ்க்கைக்கு உகந்த இடமாக வைப்பதில் நீரின் பங்கு அளப்பரியது. விண்ணிலிருந்து பார்க்கும்போது புவி பசுமையாகக் காட்சியளிப்பதற்குக் காரணம் நீர் வளமும் அது பூமியைப் பசுமையாக வைத்திருப்பதுமே ஆகும். எனவே, நீரைப் பாதுகாப்பது எமது கடமையாகும். என்றாலும் என்றுமில்லாதளவுக்கு இன்று நீர் மாசடையச் செய்யப்படுகிறது. நாம் வீடுகளிலிருந்து அகற்றும் சிறிய கழிவுகள் முதல் தொழிற்சாலைக் கழிவுகள், எண்ணெய்க் கப்பல்கள் கழிவகற்றுதல், விபத்துக்குள்ளாதல், நீருக்கடியில் மேற்கொள்ளப்படும் ஆயுதப் பரிசோதனைகள் போன்றவற்றால் நீர் வளம் பாதிப்புறும் ஆபத்து வெகுவாக அதிகரித்துள்ளது.

நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

- நீரை வீணாக்குவதைத் தவிர்ப்போம்; எம்மால் முடிந்தவரை நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவோம்.
- நாம் வீசுகின்ற சிறிய கழிவுகள்கூட நீர் மாசடைய சிறிய காரணிகளாக அமைந்துவிடலாம். எனவே, எம்மாலான சிறிய பங்களிப்பாக இவ்வாறு கழிவுகளை முறையற்ற விதத்தில் அகற்றுவதிலிருந்து தவிர்ந்திருப்போம்.
- நாளைய தலைவர்களான நாங்களும் எங்களுக்குப் பின் வரக்கூடிய எதிர்கால சந்ததியினரும் தூய நீரைப் பெற எம்மாலான சிறிய, சிறந்த பங்களிப்பை நல்குவோம். மேலும், நாம் நீரை மாசடையச் செய்ய மேற்கொள்ளும் சிறிய கேடும் எம்மையும் எதிர்கால சந்ததியையும் பாதிக்கும் என்பதால் அவற்றிலிருந்து முழுமையாகத் தவிர்ந்திருப்போம்.
- நாம் வாழ்வதற்கு மாத்திரமல்ல, மற்றைய எல்லா உயிரினங்கள் வாழவும் நீர் அவசியம். எனவே, நீர் வளத்தைப் பாதுகாத்து நாம் அனைவரும் நலமாக வாழ்வோம்.
- நீர் வளத்தின் முக்கியத்துவம் பற்றி எம்மாலான விழிப்புணர்வை சமூகத்திற்கு வழங்குவோம். உலக நீர் தினத்தில் மாத்திரமல்லாது இனிமேல் நீரைப் பாதுகாக்க என்னாலான முயற்சிகளைச் செய்வேன் என திடசங்கற்பம் பூணுவோம்.

இவ் வருடத்திற்கான நீர் தினக் கருப்பொருளாக நீரும் உணவுப் பாதுகாப்பும் என்பது அமைந்துள்ளது.

www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Trend

Local:
Single copy: LKR 100.00/-
Annual Subscription: LKR 1400.00/-
6 Months Subscription: LKR 700.00/-

International:
India, Pakistan, Maldives,
Singapore: LKR 2000.00
Middle East: LKR 2,200.00
England, New Zealand,
Australia, Malaysia, Japan,
Korea: LKR 2,400.00
United States: LKR 2,700.00

Contact Hilal at +94 777 849 169

Every month at your doorstep ...

with an assortment of fascinating stuff for the youth, the family, women and children. Presenting ideas & views and interpreting events and developments from a moderately balanced perspective.

#77, Demetagoda Road, Colombo-00900, Sri Lanka.
trendsmonthly@gmail.com | Tel: +94 777 849 169 | +94 11 2689324 | Fax: 2686030
www.facebook.com/thetrendjmf

Printed at IPC PRINTING PRESS, 23, De Vaas Lane, Grandpass, Colombo 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org